பாரத மணி

"உழவுக்கும் தொழிலுக்கும் வந்தனை செய்வோம்"—பாரதி

ஆசிரியர் : கே. எஸ். வேங்கடரமணி.

மாலை 2	ஞாயிறு 7-5-39 பிரமாதிஸு சித்திரைமீ 24உ	முத்து 6

பொருள் அடக்கம்

விஷயம்		பக்கம்
1. நெருக்கடி தீர்ந்ததா ?	...	162
2. குறிப்பு	...	164
3. தென்றல் காற்று	...	166
4. வார நடப்பு	...	168
5. முக்கிய விஷயம் (ஸ்ரீ. எஸ். ராமஸ்வாமி)	...	169
6. ஜெர்மனியும் டென்மார்க்கும் (ஸ்ரீ. த. கிருஷ்ணமூர்த்தி)	...	171
7. மீன் வயிற்று மோதிரம் (ஸ்ரீ. கொத்தமங்கலம் சுப்பிரமண்யம்)	...	173
8. அற்றைத் திங்கள் (ஸ்ரீ. ரா. ஸ்ரீ. தேசிகன்)	...	175
9. சேவலின் வேதனை (ஸ்ரீ. கு. பா. வேங்கடாசலம்)	...	177
10. ஏழைக் குடும்பம் (ஸ்ரீ. பி. வி. சுப்பிரமணியம் பி.ஏ.,)	...	178
11. லக்ஷ்மி (ஸ்ரீ. கே. வேங்கடராமன்)	...	180
12. ஹம்பியில் இரண்டு நாட்கள் (ஸ்ரீ. ரா. ஆறுமுகம்)	...	183
13. வாழ்க்கைப் போராட்டம் (ஸ்ரீமதி செல்லம்)	...	186
14. புத்தக விமர்சனம்	...	189
15. சினிமா மகாநாடு ("சிரேஷ்டன்")	...	191

"பாரத மணி" யில் வெளியாகும் கட்டுரைகள், கதைகளில் குறிப்பிடும் பெயர்கள் எல்லாம் கற்பனைப் பெயர்கள். ஒருவரையும் குறிப்பிடுவனவல்ல.



நெருக்கடி தீர்ந்ததா?

ஸ்ரீ சுபாஷ் சந்திரபோஸ் தமது பதவியை ராஜிநாமா செய்ததால் காங்கிரஸில் ஏற்பட்டிருந்த நெருக்கடி தீர்ந்ததா? பாபு ராஜேந்திர பிரஸாத் ராஷ்டிரபதியாகத் தேர்ந்தெடுக்கப்பட்டதில் நிலைமை சரியாகப் போய்விட்டதா?

ஸ்ரீ சுபாஷ் சந்திர போஸ் தன் பதவியை ராஜிநாமா செய்துவிட்டார்; ஆனால் காங்கிரஸிற்குள் ராஜிமட்டும் இன்னும் ஏற்படவில்லை. சுபாஷ் தன் புரட்சிக் கொள்கைகளை ராஜிநாமா செய்யவில்லை அல்லவா? எனவே காங்கிரஸ் நெருக்கடி தீரவில்லை. சொல்லப் போனால் உண்மையில் காங்கிரஸிற்குள் நெருக்கடி இப்பொழுதுதான் ஆரம்பமாகி இருக்கிறது. சுபாஷ் பதவியில் இருந்து யாதொரு நெருக்கடியையும் ஏற்படுத்தவில்லை; அதிலிருந்து நீங்கியதால்தான் நெருக்கடியை ஏற்படுத்திவிட்டார். அதற்கு அத்தாட்சியாக, அவர் தன் கூட்டாளிகளுடன் காங்கிரஸிற்குள் ஒரு தனிக்கட்சி ஏற்படுத்தப் போவதாக ஒரு செய்தி வந்திருக்கிறது.

எனவே நாட்டின் நிலைமை முன்னைக் காட்டிலும் இப்பொழுதுதான் அதிகமாக மாறுதல் அடைய இருக்கிறது. அதற்காக நாம் வருந்தவேண்டிய அவசியமே இல்லை. தனி மனித மனக் கசப்புகள் இல்லாமல் எவ்வளவு மாறுதல்கள் ஏற்பட்டாலும் பாதகமில்லை.

நாம் சுபாஷ் சந்திரபோஸின் திடத்தை மனப் பூர்வமாகப் பாராட்டுகிறோம். ஒளிவு மறைவின்றி தன் அபிப்பிராயங்களை ஒட்டி அவர் பகிரங்கமாக காந்தீயத்தை எதிர்த்தது (முடிவில் அவருடைய ராஜினாமாவின் அர்த்தம் அதுதான்) அவருடைய தைரியத்தையும் உணர்ச்சி வேகத்தையும் காட்டுகிறது. அன்று ஸி. ஆர். தாஸ் காந்திஜியை எதிர்த்தது போல இன்று போஸ் எதிர்த்தார். ஆனால் அவர் ராஜினாமாவை நாம் அவருடைய தோல்வி என்று கருதவே முடியாது. அது அவருடைய அபிப்பிராயத்தின் வெற்றியாகும். அவருடைய மனப் பூர்வமான கொள்கைகளின் வெற்றியாகும். இதுவரையில் அவர் காந்தீயத்தின் அடிமை. இன்றுதான் அவர் சுதந்திர புருஷன்.

அவரைப் போல காந்தீயத்தில் பரிபூர்ணமாகப் பற்றில்லாதவர்கள் நாட்டில் பலர் இருக்கிறார்கள் என்பதை சமீப காலத்து நிகழ்ச்சிகள் ருஜுப்படுத்தி விட்டன. சுபாஷின் கிளர்ச்சி காந்தீயத்திற்கு ஒரு சோதனை: அவரே தன் அறிக்கைகளில் அதைத் தெளிவாக விளக்கியிருக்கிறார். தீவிரவாதம் இன்று நாட்டில் ஒரு சக்தி என்பதில் சந்தேகமில்லை. ஒரே ஒரு விஷயம். காந்தீயமே ஒரு மகத்தான தீவிரவாதமாக இருப்பதுதான் வேறு புரட்சி தத்துவத்திற்கு இங்கே பெருவாரி பலம் கிடைக்கமாட்டேனென்கிறது.

ஆனால் காந்தீயத்தில் ஏற்பட்ட ஒரு சிறு வியாதியின் பலன் இந்த எதிர்ப்பு;

சிறு பலவீனத்தால் ஏற்பட்ட சுரம் இது. காந்தியத்தின் கீழ் காங்கிரஸ் பதவி ஏற்றதில் அதன் புரட்சி தத்துவம் ஓரளவு பாதகப்பட்டுவிட்டது. மந்திரி சபைகள் ஓரளவு மிதவாதிகள்போலக்கூட ஆகிவிட்டன. சத்தியாக்கிரகம்கூட சந்திக்கு வந்துவிட்டது. இந்த நிலைமையால் ஏற்பட்ட அதிருப்தியின் சிகரம்தான் சுபாஷின் இயக்கம்.

காந்தியம் அலைக்காற்றிலும் நிலைத்து நிற்கும் வலுவு கொண்டதால் இன்று இன்னும் அது செல்வாக்குப் பெற்றிருக்கிறது. அதன் அறிகுறி தான் இன்று பாபு ராஜேந்திர பிரஸாத் ராஷ்டிரபதியாகத் தேர்ந்தெடுக்கப்பட்டது.

ஓரளவு சிற்றத்தையும் செல்வாக்குக் குறைவையும் கூடக் கவனியாமல் காந்திஜி தான் பிடித்தபிடியாக நிலைமையை தன் இஷ்டப்படி மாற்றி அமைத்தது அவர் ஒரு மகத்தான பொறுப்பை ஏற்றுக்கொள்ளத் தயாராய் இருக்கிறார் என்பதைத் தான் காட்டுகிறது. நாட்டின் எதிர் காலத்தைப் பற்றி அவர் கொள்கைகளின் ஒரு முற்றின முடிவாக ஏதோவொரு திட்டம் போட்டிருக்கிறார். அதை நிறைவேற்றவே இன்று காங்கிரஸ் காரியக்கமிட்டியை அமைத்திருக்கிறார். அதற்காகவே தூஷணை புஷணைகளையும் கூட லட்சியம் செய்யாமல் போஸுக்கு உதவி செய்ய மறுத்துவிட்டார்.

இப்படி எந்த நோக்கிலும் நெருக்கடி தென்படுகிறது. இந்தியா சட்டச் சீர்திருத்தம் ஒரு சிறு முள்ளாகத் தோன்றியிருக்கிறது. சமஸ்தானப் போர் முஸ்தீபுகள்தான் இருக்கவே இருக்கின்றன. காங்கிரஸிற்குள்ளேயே கொள்கைப் போர் இருக்கிறது; வெளியே சமஸ்தானம் என்ற கலத்தில் பிரிட்டிஷ் தலைமை அதிகாரத்துடன் சுதந்திரப் போர் இருக்கிறது. பின்னால் குறித்த போர் வலுத்ததும் முன்போர் மறைந்து விடும் என்றாலும் போர் முறைகளிலேயே அபிப்பிராய பேதம் முதல் முதலே தோன்றுவதே பலவீனத்திற் கறிகுறி. சத்தியாக்கிரகத்திற்கு இன்னும் புடம் போட வேண்டுமென்றுதான் அர்த்தம். ராஜ்கோட்டை ஒரு தோல்வி என்று சொல்லுகிறார்கள் அல்லவா? அந்த அவச் சொல் மாற வேண்டும்.

அதற்குத்தான் காந்திஜி ஒரு பிரமாண்டமான பிரயத்தினம் செய்கிறார். அதற்குக் கைபாணமாக அவருக்கு ராஜேந்திர பிரஸாத் இருப்பார் என்பதில் என்ன சந்தேகம்? இந்த நிலைமையில் அவர் ராஷ்டிரபதிப் பதவியை ஏற்றுக் கொண்டதிலிருந்தே அவர் தன் கட்மை எந்த திக்கிலிருக்கிறது என்பதை அறிந்துவிட்டார் என்று தெரிகிறது.

பதவியை ஏற்றுக்கொண்ட உடனேயே காங்கிரஸ் ஊழல்களை அகற்ற தகுந்த வழிகளை ஆராய்வதற்காக ஒரு கமிட்டியை நியமித்து விட்டார் ராஷ்டிரபதி. அதைத்தானே காந்திஜி இடைவிடாமல் ஆறுமாத காலமாகச் சொல்லிக் கொண்டு வருகிறார்? பாத்திரத்தின் களிம்பு அகன்றால்தானே பாத்திரம் உபயோகப்படும்? ஆனால் எவ்வளவுதான் காங்கிரஸ் அமைப்பைப் பரிசுத்தப்படுத்தினாலும் காங்கிரஸ்காரர்களின் மனதைப் பரிசுத்தமாக்க எந்தக் கமிட்டியால் முடியும்? 'துணி வெளுக்க மண்ணுண்டு, மனம் வெளுக்க மண்ணுண்டோ?' என்று கதறினர் பாரதி.

காந்திஜியின் மதத்தில் மனத்தை வெளுக்கக்கூட ஒரு மண் உண்டு. அதைத் தான் அவர் வண்ணான்போல உபயோகித்து அழுக்கை அகற்ற முன் வந்திருக்கிறார். நெருக்கடி ஆரம்பமாகிறது: தீரவில்லை.

குறிப்பு

ஜபம் சாயவில்லை

ரூஸ்வெல்ட் பூசாரி ஹிட்லரை அடக்கி மடக்குவதற்காகப் போட்ட ஜபம் பலிக்கவில்லை. ஹிட்லர் 28ம் தேதி ரீச்சில் பேசிய பேச்சில் ரூஸ்வெல்டின் 'விசித்திரத் தந்தியை' அக்கு அக்காக அலசி பதில் கூறி விட்டார். அந்த பதிலின் சாமர்த்தியத்தைப் பார்த்து மெச்சத்தான்வேண்டி யிருக்கிறது. ஹிட்லர் சொல்லுவது எல்லாம் சரி யென்றே அந்தப் பிரசங்கத்தைப் படிக்கும்பொழுது நமக்கு நிச்சயமாகிறது. பிறகு பிறநாட்டு ராஜதந்திரிகளின் போக்கையும் பேச்சையும் பார்த்ததும் ஹிட்லரை வைய ஆரம்பிக்கிறோம்.

ஹிட்லர் சொல்லுவதில் எது பொய்யானாலும், நிஜமானாலும் சரி; தான் ஒரு துளி ரத்தம்கூடச் சிந்தாமல்தான் இதுவரையில் நடந்துகொண்டதாக அவர் கூறுவது முற்றிலும் உண்மை. அவர் கூறுவதுபோலவே சரித்திர உண்மை. ஒரு விஷயம். ரத்தம் சிந்தும் பர்வத்தைச் செய்வதைவிட ஒரு சின்னப் பொய் சொல்லிவிடுவது மேல் என்பதுதான் ஹிட்லரின் கொள்கைபோலிருக்கிறது.

“உங்கள் சமாதான மகாநாட்டிற்கெல்லாம் நான் வரமுடியாது” என்று ஹிட்லர் கண்டிப்பாய் ரூஸ்வெல்டிற்குத் தெரிவித்துவிட்டார். காலனிகள் பிரச்னை தீருவது ஒன்றுதான் ஜெர்மனியின் கோரிக்கை என்கிறார். ரூஸ்வெல்ட் என்னசெய்வார்?

ஏகாதிபத்தியத்தின் எதிர்ப்பு

சர்வ தேச நிலைமை இருக்கிற இருப்பில் யுத்தம் ஏதாவது வந்தால் இந்தியா அதில் கலந்து கொள்ள முடியாது என்றும், ஏகாதிபத்தியத்தின் ஆளாக இருந்து சுதந்திரத்தை அழிக்க உதவி செய்ய முடியாது என்றும் அகில இந்திய காங்கிரஸ் கமிட்டியின் கூட்டத்தில் ஜவஹர்லால் நேரு பிரேரேபித்த தீர்மானம் நிறைவேறின அதே சமயத்தில் அதைத் தாக்குவதுபோல இந்தியா உதவி மந்திரி பார்லிமெண்டில் ஒரு கேள்விக்கு பதில் அளித்தார்.

காங்கிரஸ் தீர்மானம் யுத்த ஏற்பாடுகள் சம்பந்தமாக இந்தியா சட்டத்தைத் திருத்தும் மசோதாவை எதிர்த்தது; கர்னல் மூர்ஹெட் என்ன சொல்லுகிறார்? என்ன எதிர்ப்பு இருந்தாலும் பிரிட்டிஷ் சர்க்கார் தீர்மானம் மாறாது என்று ஸ்ரீ. ஸோரென்ஸன் கேட்ட கேள்விக்கு பதில் சொன்னார்.

காங்கிரஸை நேரிடையாகத் தாக்குவதாகத்தான் இருக்கிறது பிரிட்டிஷ் சர்க்காரின் தீர்மானம். அதற்கு ஆதாரமாக கர்னல் மூர்ஹெட் சப்பைக்கட்டு கட்டிச்சொல்லும் காரணங்கள் ஒன்றும் திருப்திகரமாகவே இல்லை. அந்த ஷரத்தை நுழைப்பதில் யாதொரு புது நிலைமையும் ஏற்படவில்லையாம்! மாகாண சர்க்கார்களின் வேலைகளை ஒருமைப்படுத்தி மத்திய நிர்வாகத்தின்கீழ் கொண்டுவருவதற்காகத்தான் அந்தத் திருத்தம் என்கிறார்.

ஆகவே அ. இ. கா. க. தீர்மானத்தில் இதை எதிர்க்க காங்கிரஸ் சர்க்கார்கள் தயாராக இருக்கவேண்டுமென்று கண்டிருப்பது மிகவும் பொருத்தமாகத்தான் இருக்கிறது.

கூட்டுறவு விசாரணைக் கமிட்டி

சென்னை சர்க்கார் கொஞ்சகாலத்திற்கு முன் நியமித்த, கூட்டுறவு விசாரணைக் கமிட்டி தன் வேலையை ஆரம்பித்துவிட்டது. அதற்கு வந்து ஸர்.டி.விஜயராகவாச்சாரியார் தலைமை வகிப்பதிலிருந்தும், பல பிரபல பொருளாதார நிபுணர்கள் அங்கத்தினர்களாக இருப்பதிலிருந்தும் அதன் ஆராய்ச்சிகள் மிகவும் பயன்தரக்கூடியவைகளாக இருக்கும் என்று தெரிகிறது. சர்க்கார் ஏற்கனவே கூட்டுறவு விஷயமாக ஒரு கேள்வித் தொகுதியை விடுத்து பிரபலஸ்தர்களின் அபிப்பிராயங்களை வாங்கி மூன்று வால்யங்களாக பிரசுரித்திருக்கிறார்கள். அந்த உதவியையும் வைத்துக் கொண்டு காலதாமதமின்றி கமிட்டி கூட்டுறவு இயக்கத்தைத் திருத்தியமைக்கும் விஷயமாக உபயோககரமான முடிவுகளுக்கு வரும் என்று நம்புகிறோம்.

விற்பனை வரி மசோதாக் கமிட்டி

விற்பனை வரி விஷயமாக சென்னை சட்டசபை நியமித்த தனிக்கமிட்டி தன் அறிக்கையைச் சமர்ப்பித்து விட்டது. முதல் மசோதாவில் சில சில்லறைச் சீர்திருத்தங்களைத் தான் கமிட்டி செய்திருக்கிற்து. 'வியாபாரி' என்ற பதம் நன்றாக விளக்கப்பட்டிருக்கிறது. ரூபாய் பதினாயிரத்திற்கு மேல்பட்டு இருபதினாயிரத்திற்குட்பட்ட . விற்பனைத்

தொகைக்கு வருஷம் ரூ. 75 வரியாக இருந்தது மாதம் ரூ. 25 ஆக மாறியிருக்கிறது. ஸ்டாக்குகள், பங்குகள், செக்யூரிடிகள், கிஜெய்ம்கள், தங்கம், பருத்தி, நூல், கை நெசவுத் துணி, இவை வரி விதிக்கப்படும் சாமான்கள் அல்ல என்று விலக்கப்பட்டிருக்கின்றன. எதிர்க்கட்சி அங்கத்தினர்கள் தனி அபிப்பிராய பேத அறிக்கை சமர்ப்பித்திருக்கிறார்கள். மசோதா எட்டாம் தேதியன்று அசெம்பிளியில் விவாதத்திற்கு வரும். இந்த வரியின் பலன்கள் எப்படி இருக்கும் என்பதை அனுபவத்தில்தான் கண்டறிய வேண்டியதாயிருக்கிறது. இதனால் சர்க்காருக்கு எவ்வளவு பணம் வரும் என்பதுகூட நிச்சயமாகத் தெரியவில்லை. ஆனால் இந்த வரி கட்டாயம் போட்டாக வேண்டியதுதான் என்பதை ஆட்சேபிப்பதற்கு இடமே இல்லை. சர்க்காருக்கு வேறு வழியும் இல்லை. மதுவிலக்கு சித்தியாவதற்கும் நிலவரி ஒன்றுக்கு அறையாகக் குறைவதற்கும் சர்க்காருக்கு உதவ இது ஒன்றுதான் ஒருவரையும் அதிகமாகத் தாக்காமல் அதிக வரும்படி யளிக்கும் வரி. மாகாண நிதி நிலையையே கொஞ்சம் கொஞ்சமாக சரிக்கட்டி இதர நன்மைகளை சர்க்கார் மக்களுக்குச் செய்ய உதவும் கைப்பணம் இது ஒன்றுதான்.

ஸ்ரீ சங்கர ஜயந்தி

சென்ற வாரம் நாடெங்கும் ஆஸ்திகர்களால் ஸ்ரீ சங்கர ஜயந்தி விசேஷமாகக் கொண்டாடப்பட்டது.

அந்த சந்தர்ப்பத்தை ஒட்டி கலையுலகம் பூராவும் கூடி அந்த அவதாரமூர்த்திக்கு ஒரு வந்தனம் செலுத்தியிருந்தால் எவ்வளவு நன்ருக இருக்கும்?

பகவான் சங்கரர் வெறும் மதாசாரியார் மட்டுமல்ல; வைதிக தர்மத்தை ஸ்தாபனம் செய்தார் என்பது மட்டுமல்ல. பாஷ்யகாரர் என்ற முறையில் தத்துவ தரிசனம் எவ்வளவு தூரம் போகுமோ அவ்வளவு தூரம் போய் அத்வைதத்தை ஸ்தாபித்தார்.

அத்வைத சித்தாந்தம் உலக மகாகவிகள் காணக்கிடைக்காமல் திண்டாடும் தத்துவ நிலை. அதை ஆதிசங்கரர் வாத மூலமாக நிரூபணம் செய்து ஸ்தாபித்தார்.

கவிகளுக்குக் கவியான சங்கரனை கலைஞர்கள் கொண்டாடாவிட்டால் என்ன பயன்? அவருடைய சிவானந்த லகரி நம்மை மயக்கவில்லையா?

குடியானவன் (வக்கீலிடம்) என்ன சாமி இப்படி கேசு அனியாயமா பூடுச்சிங்களே. குந்தாத்துக்குக்கூட குச்சு இல்லியே! வவுத்தெ எரியுது சாமி...

வக்கீல்:—நான் கேஸ் விஷயமா எவ்வளவு சொல்லணுமோ அவ்வளவும் சொன்னேன். கடைசியா "நானும் ஏழை, என் கக்ஷிக்காரனும் ஏழை. கோர்ட்டார் பார்த்து தயவு பண்ணனும்" னுகூட சொல்லிப்பிட்டேன். அந்த எழவெடுத்த ஜட்ஜ் ஏதாவது காதிலே போட்டுண்டாத்தானெ!!

தென்றல் காற்று

விக்கிரமாதித்தன் கதையில் பின்வரும் ரஸமான குட்டிக் கதை வருகிறது.

கேளாய் விக்கிரமாதித்தனே! புஷ்பபுரத்தின் சமீபத்திலோர் பாழுங் கோயிலுண்டு. அதிலோர் பிராமணன் பசியினாலேயே மெய் தளர்ந்து படுத்துக்கொண்டிருந்தான். அவனை யொரு யோகி புருடன் கண்டு அவன் பசியைத் தீர்க்க வேண்டுமென்று மனதிலெண்ணி மந்திரத்தினாலொரு பட்டணமுண்டு பண்ணி பிராமணன் வீட்டிலே அன்னமிட வைத்தான். அந்தப் பிராமணனும் திருப்தியாகச் சாப்பிட்ட பின்பு களை தெளிந்தான். அப்போது யோகி புருடன் அப்பிராமணனுக்கு மந்திர உபதேசம் பண்ணினான். அவன் ஸ்நானம் பண்ணவேண்டுமென்று போய் ஸ்நானம் பண்ணுகையில் தன்னுடைய பிள்ளை வந்து நின்றதுபோல் கனவு கண்டு வெளியே வந்து யோகி புருடனே நான் முழுகப் போய்ச் சலத்திற் சிரசை யமிழ்த்துகையில் இக்கனவு கண்டேன் என்று சொன்னான். அந்த மந்திரம் அவனுக்குப் பலியாமற் போனதேதென்று வேதாளங்கேட்க, விக்கிரமாதித்தன் சொல்லுகிறான்: விரதம் சிரத்தை தானம் முதலியவை ஏக மனதாக இருந்தாற் பலிக்கும் இல்லாவிட்டால் பலியாதென்று சொல்லக் கேட்டு வேதாளம் கட்டவிழ்த்துக் கொண்டு பழையபடி யோடி முருக்க மரமேறிக்கொண்டது.

* * *

நவீன விக்கிரமாதித்தன் கதையில் பின் வருமாறு காணப்படுகிறது.

கேளாய் விக்கிரமாதித்தனே! இந்த பூலோகத்திலே இந்தியாவென்று ஒரு பாழுந்தேசம் உண்டு. அந்த தேசத்தினுள் ஜனங்கள் அடிமைத்தனத்தில் மெய்தளர்ந்து வருந்தினார்கள். அவர்களை மகாத்மா காந்தி கண்டு அவர்கள் சுதந்திர தாகத்தைத் தீர்க்க வேண்டுமென்று மனதில் எண்ணி, காங்கிரஸில் எல்லோரையும் சேரச் சொல்லி போதித்தார். அந்த ஜனங்களும் கட்சி பலம் பெற்று தைரியமடைந்தார்கள். அப்போது மகாத்மா காந்தி மக்களுக்கு அஹிம்ஸா மந்திரத்தை உபதேசம் பண்ணினார். உடனே தேச ஜனங்கள் போராட்டத்தை ஆரம்பிக்க வேண்டுமென்று போருக்குத் தயாராகும்போது சிலருக்கு 'சுயநலம்' என்ற பிள்ளை கனவில் வந்து நின்றது கண்டு வெளியேவந்து மகாத்மா காந்தியிடம் "நான் போருக்குத் தயார் செய்து கொள்ளும்போது இக்கனவு காணவில்லை" என்று பொய் சொல்லி வீட்டுக்குக் காபி சாப்பிடப்போனார்கள். அந்த அஹிம்ஸா மந்திரம் இவர்களிடம் பலியாமற் போனதேனென்று வேதாளம் கேட்க விக்கிரமாதித்தன் சொல்லுகிறான்: அஹிம்ஸைப் போர் செய்து சுதந்திரம் கிடைக்கவேண்டுமென்றால் முதலில் தலைவர்கள் பதவி வேட்டை, சுயநலம், கட்சிச் சண்டை இவைகளைக் களைய வேண்டும். இல்லாவிட்டால் பலியாதென்று சொல்லக்கேட்டு வேதாளம் கட்டவிழ்த்துக் கொண்டு பழையபடியே முருக்கமரமேறிக் கொண்டது.

* * *

பண்டித ஜவஹர்லால் நேரு, உலக யுத்தம் வந்தால் இந்தியா அதில் சேரக் கூடாது என்றும், யுத்தத்தில் இந்தியர்களை இழுக்கும் நோக்கத்துடன் இந்தியா சட்டத்தை மாற்றுவதற்காக நடக்கும் முயற்சிகளை எதிர்க்கவேண்டுமென்றும் பேசினார். "நாம் எல்லோரும் இப்போது ஒன்றாக பிணைக்கப்படவேண்டும். (Hang Together) இல்லாவிட்டால் தூக்குக்கயிறு நம் ஒவ்வொருவர் தொண்டையையும் (Hang seperately) பிணைத்து விடும்" என்றார். அதாவது, நாம் தூங்கிக்கொண்டி

ருந்தால் நாசமாய் போய்விடுவோம் என்று அர்த்தம். துக்ககரமான வேளையில்கூட ஜவஹர்லால் வேடிக்கையாகத் தான் பேசுவார்!

* * *

ஜவஹர்லால் இப்படிப் பேசிக்கொண்டிருந்த சமயத்தில் அ. இ. கா கமிட்டிப் பந்தலுக்கு வெளியே இருந்த ஜனங்கள் பந்தலுக்குள் வர முயன்றனர். உடனே தொண்டர்கள் தடுக்க முயன்றபோது நடந்த போரில் தொண்டர்கள் மேல் கருங்கல்லும் செங்கல்லும் வீசப்பட்டு அவர்கள் படுகாய மடைந்தார்கள் என்று செய்தி கூறுகிறது.

* * *

உள்ளே வர முயன்றவர்கள் ஜவஹர்லால் வார்த்தைகளின்படியே தாங்கள் நடந்ததாகவும் தொண்டர்கள் தான் தங்கள் லக்ஷ்யத்திற்கு குறுக்கே நின்றதாகவும் கூறுவார்கள். அதாவது ஜவஹர்லால் எல்லோரும் ஒன்று சேர வேண்டும் என்று சொன்னரல்லவா, அதே மாதிரி பந்தலுக்கு வெளியே நின்றவர்கள் உள்ளே இருந்த மெம்பர்களுடன் ஒன்று சேர ஆசைப்பட்டார்கள். ஆனல் அந்த ஒற்றுமை உண்டாவதை பந்தலினுள்ள தொண்டர்கள் தடுத்தார்களாகையால்இந்த களேபரம் நடந்தது என்று எம். என். ராய் ஓர் அறிக்கை வெளியிடுவார்.

* * *

கல்கத்தாவில் பிரபல தலைவர்களுக்கு ஆசார உபசாரம் செய்ய வேண்டுமென்றும், வந்த விருந்தினர்களை வரவேற்க வேண்டுமென்றும், அதற்கு எல்லோரும் தயாராக இருக்கவேண்டுமென்றும் ஸ்ரீ போஸ் முதலிலேயே ஓர் அறிக்கை வெளியிட்டார். அந்த அறிக்கையை கல்கத்தாக்காரர்கள் வாசிக்கவில்லை என்று தோன்றுகிறது. அல்லது ஹக் சர்க்கார் சென்னை சர்க்கார் ஆர்யசமாஜ் பிரசுரத்தைத் தடுத்தது போல் சுபாஷ் அறிக்கையைத்தடுத்து விட்டார்களா என்று தெரியவில்லை. எப்படியிருந்தபோதிலும் கல்கத்தாக்காரர்கள் காங்கிரஸ் கமிட்டிக்கூட்டத்தின் போது உத்சாகமாய் உபசாரம் செய்ததைப் பார்க்கும்போது சுபாஷ் அறிக்கையை அவர்கள் படிக்கவில்லை என்றே தெரிகிறது.

கல்கத்தாக் கலாசாலை மாணவர்கள்தான் எல்லோரையும் விட ரொம்ப உத்சாகமாய் இருந்தார்களாம். கல்லையும் மண்ணையும் எறிந்தார்களாம். உடனே சர்வ கலாசாலையார் கல்லைக்குறிபார்த்து அடிக்கும் வித்தையை மாணவர்களுக்குக் கற்றுக் கொடுக்கவேண்டும். அந்த வித்தையைச் சொல்லிக்கொடுக்கக்கூடாது என்று சரத் சந்திரபோஸ் அறிக்கை வெளியிடுவார்.

* * *

அ. இ. கா. கமிட்டியில் நடந்தது போன்ற குழப்பத்தைத் தடுக்கவேண்டுமென்றால் முன்னதாகவே தகுந்த ஏற்பாடு செய்திருக்கலாம். கமிட்டிக் கூட்டத்தை கல்கத்தா கலாசாலை எதிரில் ஏதாவது திறந்த வெளி இருந்தால் அங்கே நடத்தியிருக்கலாம். பந்தல் வேண்டியதில்லை. தொண்டர்கள் வேண்டியதில்லை. $2\frac{1}{2}$ டன் செங்கல்லை கூட்டத்திற்கு அருகில் குமித்து விடவேண்டும். இப்படியெல்லாம் கல்கத்தாவில் ஏற்பாடு செய்திருந்தால் கமிட்டிக் கூட்டம், இப்போது நடந்த குழப்பம் கூட இல்லாமல் சுகமாக நடந்திருக்கும்.

தமிழ் நாடு, குஜராத், பீஹார் இந்த இடங்களில் அ. இ. கா. கமிட்டி கூடியிருந்தால் பெரிய ஆபத்தல்லவோ வந்திருக்கும்!

வார நடப்பு

கல்கத்தாவில் நடந்த தலைவர்கள் சம்பாஷணை ஒருவாறாக முடிந்தது.

திருபுரி தீர்மானப்படி காரியக்கமிட்டி அமைக்க தலைவர்கள் செய்த பிரயத்தினங்கள் வீணாயின. எனவே சுபாஷ்பாபு ராஜீனாமா செய்தார்.

• தலைவர் ராஜீனாமா செய்வது உசிதமல்ல என்றும், தேசவிரோதிகளை எதிர்க்க வேண்டிய பலம் ஒற்றுமையின்றி வாராதென்றும், பண்டிட் ஜவஹர்லால்நேரு எடுத்துக்கூறினார். சுபாஷ்பாபுவின் ராஜீனாமாவை திருப்பி வாங்கிக்கொள்ளும்படி கேட்டுக் கொண்டார். ஆனால் சுபாஷ் சந்திரபோஸ் பிடிவாதமாக நின்றுவிட்டார்.

தலைவருமில்லாமல், பொதுக் காரியதரிசியுமில்லாமல் இருக்கிற சந்தர்ப்பத்தில் அகில இந்திய காங்கிரஸ்கமிட்டி ஒரு புதிய தலைவரைத் தேர்ந்தெடுக்கலாம் என்று தலைவர்கள் சர்ச்சை செய்து நிச்சயத்துக்கு வந்தார்கள். அதன்படி பாபு ராஜேந்திர பிரஸாத் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

ராஷ்டிரபதி ராஜேன் பாபு காரியக்கமிட்டியை அமைத்தார். அங்கத்தினர்கள்: மௌலானா அபுல்கலாம் அஸாத்; ஸ்ரீமதி ஸரோஜினி நாயுடு; ஸர்தார் வல்லபாய் பட்டேல்; ஸேத் ஜம்னுலால் பஜாஜ்; ஜெயராம்தாஸ் தௌலத்ராம் ; கான் அப்துல் கபர்கான்; ஜே. பி. கிருபாலினி; டாக்டர் பட்டாபி ஸீதாராமய்யா; புலாபாய் தேசாய்; சங்கரராவ் தேவ்; ஹரிகிருஷ்ண மஹதாப்; டாக்டர் பி. ஸி. ராய் ; டாக்டர் பிரபுல்ல சந்திர கோஷ். புதிய ராஷ்டிரபதி தலைமையில் அ. இ. காங்கிரஸ்கமிட்டி வேலைசெய்ய ஆரம்பித்தது. பல முக்கியமான தீர்மானங்கள் கொண்டுவரப்பட்டன. இந்திய அரசியல் சட்டத்தின் சீர்திருத்த மசோதாவைக் கண்டித்தும் அது அமுலுக்கு வருவதை மாகாண காங்கிரஸ் சர்க்கார் எதிர்க்கவேண்டும் என்றும் ஜவஹர்லால்நேரு கொண்டுவந்த தீர்மானம் நிறைவேறிற்று.

காந்திஜி கல்கத்தா சென்றதும் ராஜ்கோட் வீரவல்லா, ஸமஸ்தான ஜனங்களுக்கு பிறர் தலை யிடாமலே பொருப்பாட்சியளிக்க தான் எண்ணி இருப்பதைத் தெரிவித்தார். சில இலாகாக்களில் சமஸ்தான ஜனங்கள் பூரண உரிமை செலுத்த அவர் ஏற்பாடு செய்வதாகத் தெரிகிறது.

இதையறிந்த காந்திஜி சந்தோஷச் செய்தி ஒன்றை தாகூர் சாகிபுக்கு கல்கத்தாவிலிருந்து அனுப்பி இருக்கிறார்.

பிரிட்டன் கட்டாய ராணுவப் பயிற்சி மசோதா ஒன்று கொண்டுவர தீர்மானித்திருக்கிறது. 20 வயதிலிருந்து 21 வயதுக்குள்ளிருக்கிறவர்கள் எல்லாம் ராணுவத்தில் சேர வேண்டுமாம். தேசத்தைப் பாதுகாக்க அத்திட்டத்தைக் கொண்டுவரப் போவதாக சேம்பர்லின் கூறுகிறார்.

ஜெர்மன் பிரதிநிதிச் சபை முன்னிலையில் ஹிட்லர், தலைவர் ரூஸ்வெல்ட்டுக்கு ஆணித்தரமான பதில் அளித்திருக்கிறார். ஜெர்மனி இதுவரையில் நடத்திவந்ததை எல்லாம் ஆக்கிரமிப்பு இல்லை என்று வெகு அழகாக ரூபித்துக் காண்பித்தார். இப்பொழுது ஜெர்மனி ராஜ்யத்தில் சேர்த்துக்கொண்ட ஐரோப்பாவின் பாகங்கள் எல்லாம் முன் ஒரு காலத்தில் ஜெர்மனிக்குச் சொந்தமானதாக இருந்தவை தான் என்று சரித்திர ஆதாரத்தைக்கொண்டு வாதித்தார். சண்டைக்கு தாங்களே முன் வருகிறார்கள் என்று பிரிட்டிஷார்களைக் குற்றம் சாட்டினார். தான் பிரிட்டனுடன் ஒத்துழைக்க வேண்டும் என்று செய்த பிரயத்தினங்களெல்லாம், அத்தேசத்தின் துன்மார்க்கப் போக்கால் வீணாயின என்று எடுத்துக் கூறினார். ஆங்கிலோ-ஜெர்மன் கப்பற்படை ஒப்பந்தத்தை ஒரே பேச்சில் நிராகரித்தார். போலந்து இங்கிலாந்துடன் உறவு கொண்டாடி வருவதால் ஜெர்மனிக்கும் போலந்துக்கும் உள்ள ஒப்பந்தம் ரத்து செய்யப்பட்டது என்று தெரிவித்தார். டான்ஸிக்கைத் திருப்பித்தர வேண்டும் என்று கேட்டதற்கு போலந்து மறுத்ததைக் குற்றங் கூறினார். தலைவர் ரூஸ்வெல்ட், தன் செய்தியால் பிரேரித்த ஒருவிதமான தீர்மானத்துக்கும் ஹிட்லர் இடங்கொடுக்காமல் வெகு சாமர்த்தியமாகப் பதிலளித்தார்.

ஆனால் இப்படி ஹிட்லர் அமைதியாக பதிலளித்திருப்பதால் ஒருவேளை பிரயத்தினம் செய்தால் சீக்கிரத்தில் சமரஸம் கைக்கூடும் என்ற அபிப்ராயம் பரவி இருக்கிறது.

தலைவர் ரூஸ்வெல்ட்டும் இந்த அபிப்ராயத்தைத்தான் கொண்டிருப்பதாகத் தெரிகிறது. ஆனால் அவர் இந்த பதிலைப்பற்றி ராஜீய ரீதியில் ஒன்றும் வெளியிடவில்லை.

முக்கிய விஷயம்

(ஸ்ரீ எஸ். ராமஸ்வாமி)

கால் நடைகளின் தேக அமைப்பு, அவைகளின் இயற்கைக் குணங்கள், சௌக்கியமா யிருக்கும்போது அவைகளிருக்கவேண்டிய நிலைமை, வியாதி கண்டவிடத்து அவைகள் நமக்கு வெளிப்படையாய்க்காட்டும் சின்னங்கள் இவைகளைப் பற்றி முன்னுல் குறிப்பிடப்பட்டது. ரயத்துகளின் முன்னேற்றத்தை உத்தேசித்தே கால் நடைகள் விஷயமாக எழுதப்படும் இவ்வியாசங்கள். அவர்களின் கவனத்தை, கால் நடைகளினிடத்தில் செலுத்த முயலுவதே எழுதுபவரின் முக்கிய நோக்கம்.

கால் · நடை விஷயத்தில் ரயத்துகள் "நின்றவரை நெடுஞ்சுவர், விழுந்தால் குட்டிச்சுவர்" என்ற நோக்கத்தோடிருக்கிறுர்கள். அவைகளின் பாதுகாப்பே தம் இலக்ஷியங்களில் முதன்மையானது என்பதை மறந்து விடுகிறுர்கள். அவைகளுக்குச் செய்யவேண்டிய கடமைகளைச் சரிவரச் செய்யாவிட்டாலும் செய்யக்கூடாதவைகளைச் செய்யாமலிருக்கிறுர்களா? ஒருவன் நன்மையே செய்வதில்லை என்றுலும் அவன் அதேமாதிரி தீமையே செய்வதில்லை என்றிருந்தால் எவ்வளவு மேன்மையாயிருக்கும்? கால் நடைகளைப் பாதுகாக்கும் விஷயத்தில், செய்யக்கூடாத பல ஹிம்ஸைகளையும் அசௌகர்யங்களையும், அவைகளுக்கு நாம் செய்து வருகிறேம். இதற்கு நாம் தொன்றுதொட்டு கையாண்டுவரும் சில பழக்க வழக்கங்களே காரணம்—இவைகளில் நல்லவைகளுமிருக்கின்றன. கெட்டதை நீக்கி நல்லதை விருத்தி செய்வதே நாகரீகத்திற்கழகு. மேற்சொன்ன கெட்ட பழக்கங்களைப் புறக்கணித்தோமானுல் கால் நடைகளுக்கு நாம் நம் கடமைகளைச் சரிவரச் செய்யாவிட்டாலும் செய்த பலன் அடைவோம்.

தஞ்சாவூர் ஜில்லாவில் பெருத்த சரீரமுள்ள மாடுகளே கிடையாது. சில மிராசுதார்கள் பாரி மாடுகள் வைத்திருக்கிறுர்கள். ஆனுல் இவை ஓங்கோல் அல்லது ஆலம்பாடி இனத்தைச் சேர்ந்தவை. தஞ்சாவூரிலே உற்பத்தியாகும் மாடுகள் சுமார் 500 அல்லது 600 பவுன் எடைக்குள்ளாகவே இருக்கும். தவிர தஞ்சாவூரில் கொம்புள்ள மாடுகளைப் பார்த்திருக்கிறீர்களா? பசுக்களையும் எருமைகளையும் சேர்க்காமல் பார்த்தால் ரொம்ப அபூர்வம். வேலை செய்யும் எருதுகளெல்லாம் மொட்டை. இரண்டு கொம்புகளும் மாட்டின் சுயபாதுகாப்புக்காக ஏற்பட்டவை. கொம்புகள், சீப்பு முதலான சில இன்றியமையாத சாமான்கள் செய்வதற்கு உபயோகப்படுகின்றன. தவிர மொட்டை மாடுகள் பூட்டப்பட்ட வண்டியில், மேடு பள்ளங்கள் அதிகமாயுள்ள ரஸ்தாவில் பிரயாணம் செய்பவன் படும் அவஸ்தை சொல்லி முடியாது. மாடுகளுக்கும் அபாயம் ஏற்படுகிறது. மேட்டிலிருந்து பள்ளத்திற்கு வண்டி விரைவாய் ஓடும்போது நுகம் கொம்பால் தடுக்கப்படாமல் மொட்டை மண்டையைத் தாண்டி நழுவிக் கீழே விழுந்து விடுகிறது. பள்ளத்தில் தானுக நகர்ந்து கொண்டிருக்கும் சக்கரங்கள் மாட்டின் பின் கால்களில் ஏறி பெரிய காயம் உண்டு பண்ணி விடுகிறது. சில சமயம் குளம்புகள் கழன்றுவிடுகின்றன. கொம்புள்ள மாட்டுக்கு இந்த ஆபத்தில்லை. இவ்வளவு அவசியத்தோடு கடவுள் உற்

பத்தி பண்ணியிருக்கும் கொம்புகளை அவைகள் முளைத்துக் கிளம்பும் தருணத்தில் சூடு கோலால் தீய்த்து விடுகிறார்கள். சரியாகத் தீய்க்கப்பட்டால் கொம்பு வளராமலிருந்து விடுகிறது. மாடு எவ்வளவு பாரியானாலும் கொம்பில்லாதிருந்தால் அழகாகக் காணப்படுவதில்லை. இது தெரியாததல்ல. அப்படி இருந்தும் ரயத்துகள் இம்முறையைக் கையாண்டு வருவதற்குக் காரணமில்லாமலில்லை. குழந்தைகளுக்கு நாம் மூன்றாம் வருஷத்தில் மொட்டையடிக்கிறோமல்லவா? அப்பொழுது குழந்தைகள் கொஞ்ச காலம் மொட்டையாயிருக்கிறார்கள். பின் குடுமி வைக்கிறோம். "மொட்டையிட்டால் கட்டையிடும்" என்பது மூத்தோர் சொல் வார்த்தை. இந்த வாக்கின் உண்மை எப்படி இருந்தபோதிலும் நமது ரயத்துகள் மாட்டை மொட்டையாக்கினால் அவை பலமடைந்து நன்றாய் வளரும் என்று அபிப்பிராயப்படுகிறார்கள். இந்த அபிப்ராயத்திற்குமேல் சொன்ன முது வாக்கியத்தைச் சாக்ஷி கூறுகிறார்கள். இந்த விஷயத்தைப்பற்றி என் நண்பர் பெரிய மிராசுதார் ஒருவரிடம் நான் பேசியபோது அவர் மொட்டை மாடுகள் அழகாக விருக்கின்றன என்று சொல்லும்வரை தீவிரமாய் வாதித்தார். "சுமங்கலிகளைப் பார்த்த கண்களினால் விதவைகளைப் பார்த்து இவர்கள் வேஷமும் அழகாயிருக்கிறது என்று சொல்வதுபோல் தோன்றுகிறது தங்கள் அபிப்ராயம்" என்று நான் சொன்னதும் அவர் கோபித்துக்கொண்டார். அவரை ஒருவாறு சாந்தப்படுத்தினேன். ஆனால் பின்னால் சுமார் இரண்டு வருஷங்கள் கழித்து அவர் மாட்டுக்கொட்டிலைப் பார்க்கவேண்டி நேரிட்டபோது மொட்டை மாடுகளே அங்கு காணப்படவில்லை. ஆகையால், உண்மையைத் தெரிந்து கொண்டதோடு அதன் படி நடந்துகொள்ளுவதற்கு வேண்டிய மனோ தைர்யமும் அவரிடம் இருந்தது பாராட்டத்தக்கது.

கொம்புகள், தலையில் இருக்கும் காலி ஸ்தலங்களின் மேல்பாகத்திலிருக்கும் இரண்டு ஸ்தலங்களிலிருந்தும் முளைக்கின்றன. இந்த ஸ்தலங்கள் மெல்லிய ஒரு வகை எலும்பினால் மூடப்பட்டு, இதன் மத்தியினின்றும் கொம்புகளின் குருத்துகள் வெளிக் கிளம்புகின்றன. இவைகளை வெளிக் கிளம்பும் தருணத்தில் தீய்த்து விடும்போது பக்கத்திலிருக்கும் (காலி ஸ்தலத்தின்) மூடியும் தீய்ந்து போனால் காலி ஸ்தலங்கள் திறந்து போய் விடுகின்றன. இதை மூடுவது எவ்வளவு சாமர்த்தியமாயும், ஜாக்கிரதையாயும் வைத்தியம் செய்வதாலும் ஆவதில்லை. மிகக் கடினம். தஞ்சாவூர் ரயத்துகள் தீவிர புத்தியுள்ளவர்கள்; சாமர்த்திய சாலிகள். சாகும் தருவாயிலிருக்கும் இரண்டு மொட்டை மாடுகளை வைத்துக்கொண்டு காவிரிப் பாசனத்திலிருக்கும் நஞ்சை நிலத்தை நாலு இஞ்சுக்கு உழுது மண்ணைப் புரட்டி விதைத்துவிட்டு வீட்டில் உட்கார்ந்து சாப்பிடுகிறவர்களல்லவா? கோபமுத்தூர், பெல்லாரி, கர்னூல் ஜில்லா ரயத்துகளைப் போல் நெற்றி வேர்வை நிலத்தில் விழ பாடுபட்டு, கவலை ஓட்டி, பெயர்க்க முடியாத வரண்ட பூமியையும், கருப்புப் பருத்தி நிலத்தையும் தகர்த்து உழுது, கிடைத்த மாசூலைப் பணமாக்கி காலக்ஷேபம் செய்பவர்களா? தஞ்சாவூர் ரயத்து கொம்புதீய்க்கப்பட்ட மாட்டைச் சுலபமாய், சந்தையில் விற்றுவிடுகிறான். கேழ்வரகையும் சுண்ணாம்பையும் இந்தத் திறந்துபோன ஸ்தலங்களில் நிறப்பி கொம்பு வளரும் பாகத்திலிருக்கும் மயிரை சாமர்த்தியமாகப் பரப்பி காயத்தை மூடி வாங்குகிறவன் கண்ணில் மண்ணைத் தூவி, விற்றுவிடுகிறான். வாங்கினவன் ஒரு மாதம் கழித்து மண்டையில் காயமிருக்கிறதாகத் தெரிந்து தானாகவே கொஞ்ச காலம் இலைகளையும் வேர்களையும் வைத்துக் கட்டி அலுத்துப் போய்க் கடைசியாக வைத்திய சாலைக்கு வருகிறான். சிகிச்சைக்கு வந்ததும் இளங் கன்றாயிருந்து சிகிச்சை செய்ய ஜாக்கிரதையாய்ப் பாடுபடும் டாக்டராயிருந்தால் மூன்று மாதத்திற்கு மேலாகும் சௌகர்யமடைய. மூன்று மாதம் அலைவதற்குள் அலுப்பு ஏற்பட்டு நின்றுவிட்டால் நல்ல மாடாகக் கூடிய கன்று பிரயோஜனமற்றதாய் விடுகிறது. இப்படி கொம்பு தீய்ப்பதை தஞ்சாவூர் ரயத்துகள் நிறுத்தவேண்டும்.

ஜெர்மனியும் டென்மார்க்கும்

(ஸ்ரீ த. கிருஷ்ணமூர்த்தி)

அமெரிக்க நாட்டின் தலைவர் ரூஸ்வெல்ட் விடுத்த சமாதான கோரிக்கைக்குப் பதிலாக ஜெர்மனி, டென்மார்க்கையும் தன்னைக் கண்டு அஞ்சுகிறதா வெனக் கேட்டதற்கு (துஷ்டன் கையில் அகப்பட்டு விழிக்கும் சாது, அவன் தான் செய்யும் கெட்ட காரியங்களெல்லாம் சரிதானே எனக்கேட்கும் போது அடிக்குப்பயந்து ஆமென சாது கூறுவதுபோன்று) தன் மீது அந்நாடு படையெடுக்குமென்று நம்பவில்லை யென்றும், ரூஸ்வெல்ட் ஹிட்லருக்குத் தந்தி அனுப்பு முன் தன்னைக் கலக்கவில்லை யென்றும் கூறியது. ஆனால் படை திரட்டுவதாகவும் இன்று செய்தி கிடைக்கிறது. ரூஸ்வெல்ட் டென்மார்க்கையும் குறிப்பிட்டதற்குக் காரணமென்ன? ஏன் அந்நாடு ஜெர்மனியைக் கண்டு அஞ்ச வேண்டும்?

1864-ம் ஆண்டு வியன்னா உடன்படிக்கையின்படி ஜெர்மனிக்கு ஷிலீஸ்விக்கை டென்மார்க் பரிகொடுத்தது. வர்ஸேல்ஸ் உடன்படிக்கையின்படி அப்பிரதேசத்தில் 1920-ல் பொது ஜனவாக்கு கொடுக்கப்பட்டது. பிப்ரவரியில் நடந்த வட ஷிலீஸ்விக் தேர்தல் டென்மார்க்குடன் சேரவும், மார்ச்சில் நடந்த தென் ஷிலீஸ்விக் தேர்தல் ஜெர்மனியுடன் சேரவும் முடிவு காட்டின. அங்ஙனமே அந்தப்பிரதேசங்கள் டென்மார்க்குடனும், ஜெர்மனியுடனும் சேர்க்கப்பட்டன. எனவே 1864-ல் நடந்த அநியாயம் ஒழிந்து வர்ஸேல்ஸ் ஒப்பந்தத்தால் இரு சாராருக்கும் நீதி வழங்கப்பட்டது.

வட ஷிலீஸ்விக் டென்மார்க்குடன் சேர்ந்த பிறகு அங்குள்ள ஜெர்மன் மைனாரிட்டி தொகை குறைந்துவிட்டது. அவ்வாறே தென் ஷிலீஸ்விக்கிலிருந்து டேனிஷ் மைனாரிட்டியின் தொகையும் குறைந்தது. இன்றைக்கு வட ஷிலீஸ்விக்கில் சுமார் முப்பதினாயிரம் ஜெர்மனியரும் ஒன்றரை லட்சம் டேனிஷ்காரருமிருக்கின்றனர். (1935-ம் ஆண்டு ஜன நிர்ணயம்.) ஆனால் ஜெர்மன் பிரசாரர்கள் ஐம்பதாயிரம், அறுபதாயிரம், எழுபதாயிரம் வரை தங்கள் ஜனத்தொகையைப் பெருக்கிக் கொண்டே போகிறார்கள். 1935-ம் ஆண்டு அக்டோபரில் நடந்த சட்டசபைத்தேர்தலில் பதினைந்து சதவிதமே ஜெர்மன் அபேட்சகர்கள் ஆதரவு பெற்றார்கள். கல்விசாலைகளிலும் பதினன்கு சதவிதமே ஜெர்மன் சிறுவர்களிருக்கிறார்கள், ஆகவே ஜெர்மன் பிரசாரகர்களின் கூற்று பொய் என்று முடிவு கட்டவேண்டும்.

வட ஷிலீஸ்விக்கிலுள்ள ஜெர்மனியர் பெரும்பாலும் டேனிஷ் இனத்தவரே. அவர்கள் அனைவரும் டேனிஷ் பெயர்களையே இன்றும் வழங்கி வருகிறார்கள். வீடுகளிலும், சாதாரணமாகவும் உபயோகிப்பது ஜட்லண்டிஷ் என்ற டேனிஷ் மொழியின்பாற்பட்ட வழக்குச் சொல்லே, ஆனால் பொதுக்கூட்டங்களில் கையாளுவது ஜெர்மன். சுமார் ஐம்பதாண்டுகளுக்குமேல் அப்பிரதேசம் ஜெர்மன் ஆட்சியிலிருந்தபோது அங்கே வாழ்ந்த மக்களை டேனிஷ் மொழி, பழக்கம், வழக்கம் முதலியவைகளை விட்டு ஜெர்மன் கலாசாரத்தைக் கையாளும்படி ஜெர்மன் அரசாங்கம் வற்புறுத்திவந்தது. அதன் பலனாக பல டேனிஷ் காரர்கள் ஜெர்மன் கலாசாரத்தில் மூழ்கிவிட்டார்கள். தவிரவும் ஜெர்மனியின் எல்லைப் பிரதேசத்திலிருப்பதால்இரு சாராரிடையுமுள்ளகொள்வினை கொடுப்பினையால் இரு கலாசாரங்களும் அங்கு கலந்து, இதுவா அதுவா வென்று நிச்சயிக்கக்கூடிய நிலைமையில்லாமல் கலந்திருக்கின்றன. பரிசுத்த ஜெர்மானியர் பதினாயிரத்திற்கும் குறைவாக இருப்பார்கள்.

ஜெர்மனி பெரிய நாடாக விருப்பதே அம்மக்களுக்கு ஜெர்மனியுடன் சேர ஆசைகொடுக்கிறது. ஜெர்மனியிலிருந்து

தூண்டுவோரும் காரணமாகும். வட ஷிலீஸ்விக்கில் எந்த ஜில்லாவிலும் ஜெர்மானியர் மெஜாரிட்டி இல்லை. ஆறிலொரு பங்குக்கும் குறைந்த தொகையினராக அவர்கள் வட ஷிலீஸ்விக்கிலிருப்பதால் சுய ஆட்சிகூட கேட்கக்கூடிய நிலைமையி லில்லை.

டென்மார்க்கில் அவர்கள் ஒரு சதவீதமே இருப்பினும் அச்சிறு நாடு அம்மைனரிட்டிக்கு அவசிய அளவிற்கு மேலும் சலுகை காட்டிவருகிறது. கல்விச் சாலைகளிருக்கும் எந்த கிராமத்திலும் இருபது சதத்திற்கு மேல் ஜனங்களாவது, அல்லது குறைந்தது இருபத்துநான்கு பள்ளிச்சிறுவர்களின் பெற்றோர்களாவது வேண்டின் ஜெர்மன் மொழி போதிக்க அரசாங்கமும், ஸ்தலஸ்தாபனங்களும், அரசியல் சட்டப்படி கட்டுப்பட்டிருக்கின்றன.

டேனிஷ் கல்விச்சாலைகள் வெறும் மொழி போதனையுடன் நின்றுவிடுகிறபடியால், இளஞ்சிறுர்களையும் நாஜிமயமாக்க கூப்மான் என்றவர் தலைமையில் ஒரு ஜெர்மன் கல்வி ஸ்தாபனம் சொந்தமாகத் தனியாகக் கல்விச்சாலைகளை நிறுவி வருகின்றது. அக் கல்விச்சாலைகளில் கல்வி போதனையும் தவிர நாஜி அரசியல் போதனையும் நடை பெறுகிறது. வோகல் ஸாங் கென்ற ஜெர்மன் நியாயவாதியால் காணப்பட்ட நில அடமான நிதியொன்று வட ஷிலீஸ் விக்கில் டேனிஷ்காரர்கள் விற்கும் நிலங்களை எல்லாம் வாங்கிக்கொண்டு சுத்த ஜெர்மன் நாஜிகளுக்கே விற்பனை செய்து வருகிறது. அவ்வாறு வட ஷிலீஸ் விவிக்கிலுள்ள நிலங்களை ஜெர்மனியர் ஏக அனுபோகத்திற்குக்கொண்டுவர அது முனைந்திருக்கிறது. தவிரவும் ஜெர்மனிய நிலச்சுவான்தார் எவரும் டேனிஷ்காரர்களுக்கு நிலங்களை விற்காமலிருப்பதையும் அது கவனித்து வருகிறது.

மேலே கூறியவாறு வடஷிலீஸ்விக்கிலுள்ள ஜெர்மானியர் தமது செல்வாக்கைப் பெருக்கிக்கொண்டு அப்பிரதேசத்தை ஜெர்மனியுடன் சேர்க்க முனைந்திருக்கிருர்கள். அந்த ஜெர்மானியர்களின் என். எஸ். டி. ஏ. பி. என். என்ற அரசியல் கழகத்தின் தலைவரான டாக்டர் ஜென்ஸ் மோலர் சென்ற அக்டோபரில் ஆபென்ரா என்ற கிராமத்தில் கூடிய தமது கட்சித்தலைவர்களின் கூட்டத்தின் போது சென்றவாண்டு ஆரம்பத்தில் காரல்ஸ் பாடில் ஹேர் ஹென்லீன் ஜெக் சர்க்காருக்கு விடுத்த கோரிக்கைகள் மாதிரி சில வேட்கைகளைத் தெரிவித்துள்ளார். தங்களுக்கு கலாசார வகையில் சுயஆட்சியும், இத்தனை ஆண்டுகளாக தங்களுக்கு இழைத்து வரும் தீமைகளுக்கு நஷ்ட ஈடும், டேனிஷ் பத்திரிகைகள் ஜெர்மனியைக் கண்டிப்பதைத் தடுக்கவும்வேண்டுமென்று கூறினர். தவிரவும் நாஜிகளைக் கண்டிக்கும் அதிகாரிகளைப் பதவிகளினின்றும் உடனே நீக்க வேண்டுமென்றும் சொன்னர். முடிவாக அவர் தன் மகா பெரிய நாடாகிய ஜெர்மனியின் அங்கமாக, அவ்விறுதி வேண்டு கோளைக் கொடுப்பதாகவும் கூறியது குறிப்பிடத்தக்கது.

அவர்கள் முழு கருத்தை அறிய வட ஷிலீஸ்விக் ஜீடங் என்ற அவர்களின் தினசரி, டேனிஷ்காரர்கள் வடஷிலீஸ்விக்கைக் காலி செய்யவேண்டு மென்பதிலிருந்து அறியலாம். தவிரவும் சென்ற வருஷத்தில் நடந்த அவர்கள் கட்சி மகாநாட்டின் நடவடிக்கையினின்றும் அவர்கள் வடஷிலீஸ்விக்கை ஜெர்மனியுடன் சேர்ப்பதிலேயே கருத்துடையவர்களென்பது நன்கு தெரியவரும். 1864-ம் ஆண்டிலிருந்த எல்லைவரை ஸ்வஸ்திகா கொடி பறக்கவேண்டுமென்று மோலரும், ஆஸ்திரியா மாதிரி வடஷிலீஸ்விக்கை ஜெர்மானியுடன் சேர்ப்பது ஒவ்வொரு ஜெர்மானியாருடைய கடமையென்று கார்டலும் (ஜீடங் ஆசிரியர்) "எல்லையைப் பற்றி பேசாமலே அதனைப்பறிப்பதே நமது குண" மென டாக்டர் கிரைசனும் கூறியதைக் கவனிக்க வேண்டும். முடிவாக அம் மகாநாடு ஹிட்லருக்கு விசுவாச தந்தியும் கொடுத்தது. எல்லாம் ஹென்லீன் மயம்.

அவ்வாறு வட ஷிலீஸ்விக்கிலிருக்கும் கலவரத்தை ஜெர்மனி தன் சுய நன்மைக்கு உபயோகித்து வருகிறது. டென்மார்க் ஜெர்மனியைக்கண்டு அஞ்சி அந்நாட்டிற்கே பெரிதும் நன்மை விளையக்கூடிய வகையில் வியாபார ஒப்பந்தம் செய்துக் கொண்டிருக்கிறது. டென்மார்க் வெண்

(176-ம் பக்கம் பார்க்க)

மீன் வயிற்று மோதிரம்

(கோத்தமங்கலம் ஸ்ரீ சுப்பிரமணியன்)

2

[ஹஸ்தினபுரியின் நகைக்கடை வீதியிலே ஒரு ஓரத்தில் ஒரு கடைச் சுவரில் சாய்ந்தபடி, இரண்டு தாணைக்காரர்கள் நின்றுகொண்டு பேசிக்கொண்டிருக்கிறார்கள்.]

ஜானுகன் :—சூசகா! தூக்கம் வருகிறதல்லவா?

சூசகன் :—முழித்துக்கொண்டிருப்பதோ நாளுக்குப் பத்து நாழிகை! அதிலும் தூக்கம் வந்தால் அது தூக்கமல்ல. அது ஒரு வியாதி.

ஜா :—எப்படியாவது இருக்கட்டும். நாம் இங்கே எதற்காகக் காவல் காக்க வேண்டும்?

சூச :—மஹாராஜா கொடுக்கும் சம்பளத்திற்காக!

ஜா :—அதைக் கேட்கவில்லை. இந்தக் கடைகளுக்கோ வியாபாரம் இல்லை. ராஜாவின் தரிசனத்திற்கு வரும் சிற்றரசர்களின் சன்மானங்களாலேயோ ஹஸ்தினபுரத்தில் ஆபரணங்கள் பரவி விட்டன. விவசாயிகளுக்கோ கரும்பிலும் வாழையிலும் முத்துக்கள் சிதறுகின்றன. கடைக்காரர்கள் உட்கார்ந்து கொண்டு தூங்குகிறார்கள். காவல்காரர்கள் நின்றுகொண்டு தூங்குகிறோம். இந்த லக்ஷணத்திற்குக் காவல் இல்லாவிட்டால் என்ன?

சூச :—அப்படியில்லை அண்ணா! மாணிக்க வகைகள் மதிப்புப் பெறுபவைகள். மூடின முத்து உலகம் பெறும். போற்றுவதால் பொருளுக்குக் கவுரவம். பந்தோபஸ்தில்லாவிட்டால் பணத்துக்கு மதிப்பில்லை. அதோபார், பந்தியிலே நாய் புகுந்ததுபோல் இந்த வீதிக்குள் ஒரு நாடோடி வருகிறான்.

ஜா :—ஆமப்பா! ஆளைப்பார், மிகவும் கிழவனாகத் தோன்றுகிறான். பிச்சைக்காரனுக்கு உள்ள இளப்பமும் அவனிடம் இல்லை. கடைகளைக் கூர்ந்து கூர்ந்து கவனிக்கிறானே.

சூச :—இல்லை! முதல் கடைக்குள் நுழைந்துவிட்டான்.

ஜா :—எனக்கு சந்தேகம்தான். திருடன் பதுங்கிப் பதுங்கி வருவான். இப்படிப் பகலில் நுழையமாட்டான். இவன் திருட்டுப் பொருளை விற்கவந்தவன்போல் தோன்றுகிறான். அது தான் அவ்வளவு அவசரம். கவனிப்போம்.

[செம்படவன் பிரவேசித்து முண்டாசை அவிழ்த்து, பிரித்து அதன் தலைப்பில் உள்ள சின்ன மோதிரத்தை எடுக்கிறான்.]

ஜா :—டே! இங்கே வாடா.

சூச :—ஒளிக்காதே! இங்கே வா.

(முத்தன் ஒளிக்கிறான்)

ஜா :—என்னடா முழிக்கரே?

(கையில் இருந்த மோதிரத்தைப் பறிக்கிறான்)

முத்தன் :—ஐயய்யோ! அது எம்பிட்டில்லே நான்கண் டெடுத்தது. என்னை விட்டுடுங்க. நான் ஒரு குத்தமும் பண்ணலெ.

ஜா :—ஏண்டா திருட்டுப்பயலே! ஒனக்கு இது எங்கே இருந்து கிடைத்தது! ஆஹா ராஜாவினுடைய முத்திரை மோதிரம். சூசகா! இதோ பார், நவரத்தினங்களால் அவருடைய பெயர்.

முத்தன் :—ஐயோ! ராசா பெயரா! எசமாங்களே, ஏளையைப்பார்த்து எரக்கப்டுங்க. நான் இதைத் திருடலெ, சத்தியமா! விட்டேன், தோசமில்லெ.

சூச :—அடாடா, சத்தியசந்தன் தான். சந்தேகமேயில்லை. இந்த உத்தமமான பேர்வழிக்கு மகாராஜா இதை வெத்திலை வச்சு தானம் பண்ணிருக்கார்! ஏண்டா?

முத்தன் :—ஐயா! நான் ஏழை. அப்படியெல்லாம் போகமாட்டேன். கெங்கைக் கரையிலே என்வீடுங்க. சசி புஸ்கரனிக்குப் பக்கத்திலே நீங்கவேணும்னா இந்த பய எப்படின்னு அங்குட்டுக் கேட்டுக்குங்க.

சூச:—சீ அயோக்கியப் பயலே, உன் வம்சாவளி யெல்லாம் யாருடா கேட்டது?

ஜ:—அட சொல்லட்டுமே பாப்பம்.

முத்:—சாமி நான் சாதிலே செம்படவனுங்க. ஒரு நாளேக்கி மீம்பிடிக்காட்டி எம்பொண்டாட்டி புள்ளே வவுரு காஞ்சி போவும். வலையையும், பரியையும் வச்சு வவுத்தை வளக்கரவனுங்க.

சூ:—ரொம்ப சிரேஷ்டமான தொழில் தான். உனக்கு அரைவயிறு ஆகாரம் வேணுமானல் ஆயிரம் மீனுவது பிராணனை விடவேணும்.

ஜா:—அப்புறம் பேசுகிறயே. கொலைகாரனுக்குத் திருட்டு ஒரு குற்றமாகவே தோன்றுதே.

முத்தன்:—சாமி. சாதியை இழுத்து கேவலமாகப் பேசாதிங்க. சாதித் தொழிலைப் பாக்க, நம் தோட்டி கூட்டாபடி தோட்டம் சுத்தப்படுமா?

ஜா.—அட அதிகப் பிரசங்கி! குலத்தளவே யாகுமாம் குணம் என்கிறேம்.

முத்தன்:—சும்மா இருங்க சாமி! கசாப்புக்கடைகாரனுக்குக் கூட இரக்கம் இருக்கும்.

சூச:—கதையைப் பாதிலே நிறுத்திப்பிட்டாயே. நீ மீன்பிடிக்கிறவன்——.

முத்தன்:—இங்கக்கி நான் பிடிச்ச மீனே நறுக்கரப்போ வயத்துலே கெடந்து ஆம்பிட்டுச்சுங்க. மினிச்சு, மினிச்சுன்னு, மின்னி கண்ணேப் பரிச்சுச்சு. விக்கக் கொண்டாந்தேன். இங்கே உசுரையே பரிச்சுறும் போல்ருக்கு. இது தான் நெசம், இனிக் கொன்னலும் விட்டாலும் ஒங்க பொறுப்பு.

ஜா:—அயோக்கியப் பயலே! என்ன துணிச்சல்? கேட்ட கேள்விக் கெல்லாம் பதில் சொல்ரான். கதையா கட்டுகிறாய். (ஓங்கி அடிக்கப் போகிறான்.)

சூச:—ஜானுகா! நிறுத்து! அடிக்காதே. நல்ல ஜாதி வேட்டை நாய் பிடித்துத் தான் கொண்டுபோகும். கடித்துக் கொல்லாது. தவிர, திருடன் பேச்சில் நடுக்கம் இருக்கும். எங்கே மோதிரம்?

ஜா:—இதோ!

சூ:—(முகர்ந்து பார்த்து) பார்த்தாயா. இவன் உடம்பைப் போலவே இந்த மோதிரத்திலும் கவுச்சி வீசுகின்றது. நீ இவனுடன் இரு. நான் மகாராஜாவிடம் போய்வருகின்றேன்.

ஜா:—நீயா போகிருய். போய்வா அண்ணு! அண்ணு, நானுங்கூடச் சேர்ந்துதான் கண்டுபிடித்ததாகச் சொல். தயவுக் காற்று இந்தப் பக்கமும் அடிக்கட்டும்.

(சூசகன் போகிறுன்.)

முத்தன்:—ஐயோ! அப்பவே எம் பொண்டாட்டி தடுத்தாளுங்க. நாந்தான் புத்தியில்லாமெ...

ஜா:—போனது போகட்டும்! இனிமேலாவது, புத்தியாய் வாத்தம்பி அடுத்த ஜென்மத்திலே.

முத்தன்:—எசமான் போனவரை இன்னம் காணமே. வீதி விளக்குக்கூட எத்திப்பிட்டாங்களே. ஐயோ நல்ல சேதியாய்க் கேக்கணுமே!

ஜா:—பதராதே. வீதி விளக்கு எத்தினர்கள். உன் விளக்கு அணைக்கப்படலாம். ஒங் தலையை மாத்திரம் தனியா எடுத்து முத்தம் கொஞ்சுவேன்.

முத்தன்:—ஐயோ! நெசமாவா? எரக்கமில்லியா? நீங்க ஒருத்தரோடையும் கூடப் பொரக்கல்லியா?

ஜா:—இரக்கமாகத்தான் இருக்கு. ராஜாங்கத்திலேயே இதுதான் முதலாவதாக இருக்கும். நினைக்கரபோதே விரல் நடுங்குகிறது. கத்தி சூசகன் வைக்கட்டும். கழுத்துக்கு மாலை நான் போடுகின்றேன்.

முத்தன்:—ஐயோ! தெய்வமே மாரியாத்தா!

ஜா:—ஆமப்பா. உன் சாமியை வேண்டிக்கொள். அதோ அவரும் வந்துட்டாரு. என்ன இருந்தாதான் என்ன? நீதான் பாக்கியவான்.

முத்தன்:—ஏன்?

ஜா:—ஆமாம். எங்க உடம்பெல்லாம், என்னிக்காவது சாம்பலாகத்தான் போகும். இன்னும் கொஞ்ச நேரத்தில் உன் உடம்பை நாய் நரியெல்லாம்...

[சூசகன் கூப்பாடு தொலைவில் “ஜானுகா அவனுக்கு விடுதலை, மோதிரத்தைப் பற்றி அவன் சொன்னதெல்லாம் உண்மைதானும்” என்கிறுன்.] (185-ம் பக்கம் பார்க்க)

அற்றைத்திங்கள்

(ஸ்ரீ ரா. ஸ்ரீ. தேசிகன், எம். ஏ.)

ஒரு பழுத்த நிலவு. பல சுனைகளையுடைய பறம்பு மலை (இப்பொழுது பிரான் மலையென்றழைக்கப்பட்ட மலை)—அதிக சோலையோடு பொலிந்து விளங்குகிறது. மலைச்சிகரத்தில் ஓர் அழகிய அரண்மனை. அரண்மனை வாயிற்கதவு திறந்திருக்கிறது. இரவிலும் அக்கதவு மூடப்படுகிறதில்லை. வழியிழந்தவர்கட்கு நட்ட நடு நிசியிலும் அங்குப் புகலிடமுண்டு. உலகமேயிருண்டாலும் அங்கோர் வெளிச்சமும் ஆறுதலும் இல்லாமற்போகா.

முல்லைக்குத்தேரும், மயிலுக்குப் போர்வையும் மனமுவந்து ஈந்த பாரி ஆழ்ந்த சிந்தனையிலிருக்கிறான். மலையிலுள்ள எந்தக் கொடி கொழுகொம்பு இல்லாமல் தவிக்கிறதோ ; எந்தக் குருவி குளிர்காலத்தில் வருந்துமோ ; மழைபெய்தால் வளைகள் தூர்ந்து எந்த எலிகள் திகைக்குமோ ?—இத்தகைய எண்ணங்கள் அவ்வள்ளல் மனத்தில் பாய்ந்து கொண்டிருந்தன. உலகத் துன்பங்களின் ஒலிகள் அவன் செவிகளில் ஒலித்துக்கொண்டிருந்தன. "துன்பபார மனைத்தையும் தூக்கித் தாங்க எனக்கோர் வலிவையருள்வாய்" என்று சொல்வதுபோல இருக்கின்றன அவனுடைய கருணை பொழியும் பெரிய கண்கள்.

நிலா வெள்ளம் பாய்கிற அரண்மனை மேல் மாடத்தில் தெய்வநங்கைகள் என்று சொல்லும்படியான இரண்டு பெண்கள் தம் தம் வீணைகளை மடியில் வைத்துக் கொண்டிருக்கிறார்கள். காற்று சுகமாய் அடிக்கிறது, இரவில் மலரும் காட்டு மலர்களின் மணம் மலை முழுவதும் வீசுகிறது.

மற்றொரு மூலையில் சுவரின் ஓரமாய்க் கவிதிலகம் கபிலர் ஓர் ஆசனத்தில் அமர்ந்திருக்கிறார். அவர்கையில் வெள்ளியெழுத்தாணி. அது நிலவில் மின்னுகிறது. பக்கத்தில் அழகான பனையேடுகள். ஒரு புறம் நிலவொளியின் சிறப்பு ; மற்றொரு பக்கத்தில் பாடி நகர்ந்தோடுகிற மலை யருவி. மலை யருவியின் இசை வீணையின் நாதத்தோடு கலக்கிறது. கபிலரின் மனத்தின் முன் துயின்ற ஒரு கருத்து இப்பொழுது எழுகிறது. அதற்கோர் உருக்கொடுக்க முயலுகிறார். ஓலையில் எழுதுகிறார். சற்றுத் தாமதிக்கிறார். சுற்றி அவர் கண்கள் சுழன்று ஓடுகின்றன. மறுபடியும் வேகமாய் எழுத்தாணி பனையோலையில் ஓடுகிறது. பாட்டு முடிந்துவிட்டது. உள்ளத்தில் உவகை ; அவ்வுவகை உதட்டில் தெரிகிறது. அந்த சமயத்தில் பாரி அங்கு வருகிறான்.

பாரி:—என்ன, இன்றைக்கு உற்சாகமாயிருக்கிறீர்களே.

கபிலர்:—இந்தச் சுந்தரமான வேளையில், மனிதனின் மனத்தில் உவகைபூக்காமலிருக்குமா ? உங்களுக்கோர் கதைசொன்னேனே. அது ஞாபகமிருக்கிறதோ.

பாரி:—அதுதானே ! தண்ணீர் குடிக்க வந்தவன்போல் தன் தலைவியின் கையைப் பிடித்திழுக்கிறான். அவள் கத்துகிறாள். பெண் இடுகிற ஓலங் கேட்டுத் தாயார் ஓடிவருகிறாள். உடனே தலைவி பேச்சை மாற்றி பொய்யென்று சொல்லுகிறாள். "தண்ணீர் கொடுத்தேன். அது விக்கிக் கொண்டதென்றாள்" தாய் பாவினால் தலைவன் முதுகைத்தடவிக் கொடுக்கிறாள். தலைவன் குறும்பு நகையோடு தலைவியைப் பார்க்கிறான். இந்தக் கதையைத்தானே !

கபிலர் :— கதையைச் சொன்னேனேயொழிய அது ஓர் பாடலில் இப்பொழுது தான் அமைந்தது. எல்லா சமயங்களிலும் கவி பாட முடிகிறதில்லை. பாடல்கள்கூட எங்கள் சொத்தா ? உலகத்தின் ஒலிகளும் பொருள்களும் எங்கள் மூலம் வழிந்தோடுகின்றன. நாங்கள் கவிவெள்ளம் ஓடுகிற வாய்க்கால்கள்.

பாரி :— அவ் வாய்க்கால்களாக அமைவதற்கு ஒரு பாக்கியம் புரிய வேண்டாமா ? உங்களுடைய இன்பம் கலப்பற்ற இன்பம் ; பிறருக்கின்பம்; உங்களுக்கும்

இன்பம். சங்கீதம் போல உங்கள் நிலை. இம்மலை நாட்டைவிட்டு ஒரு கவியாய்ப் பள்ளத்தாக்குகளிலுள்ள மலர்களையும், செடி கொடிகளையும், அருவிகளையுங் கண்டு களிக்கப் பாக்கியம் புரிந்திலேனே என்று அநேகந்தர மெண்ணியதுண்டு.

கபிலர் :— எங்களுக்குச் சொற் சித்திரங்களிலும், மதுரமான .ஓசைகளிலும், பெரிய கருத்துக்கள் காவியங்களாகச் சமைவதிலும், இன்பம் வந்தவர்களுக்கு வரையாது வாரி விடுகிற வள்ளத் தன்மையில் உங்களுக் கின்ப காவியங்கள் அமைக்கிறோம் ; ஆனால் காவியங்களுக்கு விஷயமாகிறது உங்கள் வீரவாழ்வு. உங்கள் வாழ்வே ஒரு பெரிய காவியமன்றோ ?

பாரி :—ஈகையிலின்பமிருக்குமோ; வறியர்கள் உலகத்தில் இல்லாமற் போனால் என் மனம் சாந்தமடையும். ஈகையினால் வரும் புகழ் வேண்டாம். ஈகைக்கே யிடமில்லாமல் போகுமானால், அதைவிட வேறு இன்பம் எனக்கில்லை. அதிருக்கட்டும், பாட்டை வாசியுங்கள் கேட்போம்.

கபிலர் பாட்டைத் தம் இனிய குரலில் படிக்கிறார். நில விரவின் அமைதிக் கடலின்மீது மிதந்து சென்றது அவருடைய பாட்டொலி. அப் பாட்டையும் அமைதியாய்த் தூர உட்கார்ந்தே அவ்விரு மகளிர் கேட்கிறார்கள்.

"சுடர்த்தொடீஇ! கேளாய்தெரு
வினு மாடு
மணற் சிற்றில் காலிற் சிதையா வடைச்சிய
கோதை பரிந்து வரிப் பந்து கொண்டி
ரோதக்க செய்யுஞ் சிறு பட்டி மேலோர்நா
ளன்னையும் யானுமிருந்தேமா, வில்லிரே
யுண்ணுநீர் வேட்டேனென வந்தாற்கன்னை
யடர் பொற் சிரகத்தால் வாக்கிச் சுடரிழா
யுண்ணு நீ ரூட்டிவாவென்றாளெனயானுந்
தன்னை யறியாது சென்றேன் மற்றென்னை
வளை முன்கை பற்றி நலியத்தெரு மந்திட்
டன்னாய் ! இவனொருவன் செய்தது
காணென்றேனா
வன்னைய லறிப் படர்தரத் தன்னையா
னுண்ணு நீர் விக்கினனென்றேனா
வன்னையுந்
தன்னைப் புறம் பழித்து நீவ மற்றென்னைக்
கடைக்கணாற் கொல்வான் போனோக்கி
நகைக் கூட்டஞ்
செய்தானக் கள்வன் மகன்.

பாரி :— வெகு நன்றாய் அமைந்து விட்டதே. ஒரு சிறிய கதையல்லவோ கோவில் கொண்டுவிட்டது உங்கள் பாட்டில்!

கபிலர் :—நானே இப் பாட்டை அமைத்து விட்டேனென்று நினைக்காதீர்கள். இந்நில வழகும், வீணையொலியும், அருவியின் இசையும், இவைகளையெல்லாம் உண்டு களிக்கச் செய்யும் பாக்கியத்தையருளிய உங்கள் என்றும் குறையாத ஆதரவுந்தான்.

பாரி :— தாய் தடவுகிறபொழுது அக் காதலன் என்ன செய்தான்? கடைசி வரியை வாசியுங்கள்.

(தொடரும்)

(172-ம் பக்கத் தொடர்ச்சி)

ணையும், பாலும், மாட்டுமாமிசமும் ஜெர்மனிக்குக் கிடைக்காவிட்டால், உணவு பஞ்சம் ஏற்பட்டுவிடும். டென்மார்க்கை அரசியல் உலகில் நடு நிலைமை வகிக்கச் செய்யவும் வடஷிலீஸ்விக் காபுரா பயன் படுகிறது. அங்குள்ள ஜெர்மானியர் ஜெர்மனியுடன் உடனே சேர துடிதுடித்தாலும் மற்ற இடங்களில் தனது திட்டத்தை நிறைவேற்றிவிட்டு (அதுவரை டென்மார்க் ஒத்துழைப்பிருக்க) பிறகே அதனிடம் ஹிட்லர் திரும்புவார். ஆனால் அங்குள்ள ஜெர்மானியர் பெரிதும் அவசரப்படுவதால் திட்டம் மாறினாலும் மாறலாம். ஆகவே டென்மார்க் ஜெர்மனிக்கு ரூஸ்வெல்டின் வேண்டுதல் விஷயமாகக் கொடுத்த பதிலைக்கண்டு நாம் ஆச்சரியப் படவேண்டியதில்லை.

சேவலின் வேதனை

(ஸ்ரீ கு. பா. வேங்கடாசலம்)

[சேவல்சண்டையில் காயமுற்ற ஓர் சேவல்
தனது பெட்டையிடம் புலம்புகிறது.]

சாத்திரங்கள் மெத்த படித்துவிட்டு—நம்மை
சண்டைக்கு விட்டுமே களிக்கிறூர்கள்,
கோத்திரங்கள் நன்றுய் விளங்கிடுமா ?—இப்படி
கொலைத் தொழிலுமே செய்துவந்தால்.

எத்தனைக் கூச்சல்களிடுகிறூர்கள்—நம
தின்னலைக் கண்டு களிப்பதற்கு ?
கத்தும் மானிடர் வாய்களைத்தான்—தெய்வம்
கட்டி மூடியும் போட்டிடாதோ ?

காலிலே முள்ளொன்று தைத்துவிட்டால்—அவர்
கனவருத்தமும் கொள்ளாரோ ?
தோலைக்கிழித்துமே ரத்தமும் பீறிட—எந்தன்
தொங்கும் கால்களைப் பாராரே.

இரும்பினலாக்கிய இருதயமோ—அதில்
ஈவு இரக்கமும் நுழைந்திடாதோ ?
கருங்கல் மனமாயிருந்தாலும்—இப்படி
கத்தியைக் கட்டியும் விடுவாரோ ?

கர்வல்காக்கவும் மானிடர் உண்டென்று—பண்டை
கோழிகள் மெத்த களித்ததுண்டு,
சேவல் சண்டை, பலிகளிட்டு—நம்
சாதியை யொழிக்கிறூர் மூடர்கள்தான்.

வேடிக்கையாகவே சண்டைகள் போட—இவ்
வெட்டுக் கத்திகள் ஏதுக்கடி!
வாடி வருந்துதல் நாமல்லவோ—இது
மனதில் கொள்ளாரோ அம்மானிடர்கள் ?

ஏழைக் குடும்பம்

(ஸ்ரீ பி. வி. சுப்பிரமணியன், பி. ஏ.)

ஏழாவது பிறந்த நாள் கொண்டாட வேண்டிய தினத்தன்று ஹமீத் ஆவி மண்ணெண்ணெய்த் தகரத்தை தள்ளிக் கொண்டு வீதி வழியாக "தீப்பெட்டி! மண்ணெண்ணெய்" என்று விற்றுக் கொண்டுபோனது தான் அவன் வாழ்க்கை நாடகத்தின் முதல் அங்கம். வீட்டிற்குப் போனதும் "இன்று வீட்டில் சமயலுக்கு ஒன்றும் இல்லையே. நேற்று வாங்கி வந்த அரிசியும் மாவும்தீர்ந்துபோய்விட்டதப்பா! இன்றைக்கு...உம்..." என்ற வார்த்தைகள் அவனை எதிர்கொண்டு அழைக்கும் என்பது ஹமீத்திற்குத் தெரியாமல் இல்லை. ஆனால் அன்று அவன் சாமான்களை ஒருவரும் வாங்குவாரில்லை. எட்டாக் கையில் உள்ள பழத்தைப் பசியோடு பார்க்கும் குழந்தையை நாம் சித்திரித்துக் கொள்ளவேண்டியது தான். அவன் குழந்தை மனதில் முதலில் தோன்றிய உருவம் களைத்த தாயார்; பிறகு பசித்த தம்பி. வேண்டாவெறுப்போடு வீட்டிற்குத் திரும்பியதும் விலையாகாத சாமான்களை மூலையில் தள்ளிவிட்டு ஓடிவந்தான். "அம்மா! அம்மா!..."

மேலே பேசமுடியவில்லை. நிறைந்த குடம் தளும்புமா என்ன?

இளையவன் அப்துலின் போக்கே தனி. கையில் காலணா கிடைத்தால் போதும். உடனே கோலி; பட்டத்திற்குக் காகிதம். ஆனால் ஹமீத்திற்கு அதற்கெல்லாம் பொழுதேது? அம்மா நிர்ப்பந்தத்தின் மேல் கொஞ்சம் விளையாடினால் உடனே, "தீப்பெட்டி மண்ணெண்ணெய்!" என்று மறுபடியும் ஆரம்பிக்க வேண்டியதுதான்.

அதிருஷ்டம் தலைதூக்கிற்று. ஹமீத்திற்குப் புதையல் அகப்பட்டது. அதாவது அன்று அவனுடைய வியாபாரத்தில் ஐந்து அணா லாபம் என்று அர்த்தம். அன்று கொட்டின மழையையும், தன் சளியையும் பொருட்படுத்தாது தான் போராடிப் பெற்ற பணத்தில், தான் உரிமையுடனே கொஞ்சம் எடுத்துக் கொள்ளலாமா என்று யோசித்தான் ஹமீத். ஆனால் படித்த பாடத்தின் நீதியை நழுவவிடாத குழந்தை உள்ளம், நல்ல பிள்ளையின் வழி அதுவல்லவென்று சொல்லிற்று. "அம்மாவைக் கேட்டுத்தான் வாங்கிக்கொள்ள வேண்டும்."

சமையலறையை நோக்கி மெள்ள வந்தான் ஹமீத். "அம்மா..." என்று கூப்பிட்டான். "ஏன்?" என்றாள் தாயார். பதிலில்லை.

"ஏன் கூப்பிட்டாய் அப்பா"

"எனக்கம்மா..." ஹமீது மௌனம் சாதித்தான். அவனுக்குத் தயக்கம்; கேட்க பயம். "என்ன?" என்று மறுபடியும் கேட்டாள் தாயார்.

"அரையணா...."

தாயார் ஏனென்றுகேளாமலே கொடுத்துவிட்டாள் ஆறு காசு! டஜன் தீப்பெட்டி விற்ற லாபம்! ஆயினும் ஹமீத் கையில் வாங்கியதும் தனக்குத் தின்பண்டம் வாங்கவேண்டும் என்ற எண்ணத்தை மாற்றிவிட்டான். ஒரு மனிதனுக்கு உணவில்லையெனின் ஜகத்தினை அழித்திடவே நியாயம் அவனுக்கு இருக்கும் போது, ஏழைக் குடும்பத்திற்கு மீன் பிடித்தல் பாபமாகுமா, என்ன? ஹமீது விருவிருவென்று கடைக்குப் போனான். "ஒரு தூண்டில் கொடு" என்று கடைக்காரனைக் கேட்டான் குழந்தை. "ஒரு அணா... ஊம்...10 தம்பிடி எடு" என்றான் கடைக்காரன். ஹமீத் ஏக்கத்தோடு நின்றான். திருப்பித் திருப்பி கையிலிருந்த காசை எண்ணினான்....அம்மாவிடமிருந்து வாங்கிய அரையணாதான் சப்தித்தது. திருப்பித் திருப்பி எண்ணினாலும் ஆறு பத்தாகுமா? "பாஜி...ஆறு காசுதான் இருக்கிறது" என்றான்.

"போ, போ" வென எரிந்து விழுந்தான் கடைக்காரன். சோகம் நிறைந்த உள்ளத்தோடு திரும்பினான் ஹமீத். தை மாதத்தின் அதிகாலையில் புல் நுனியிலிருக்கும் பனித் துளிகள் போன்று அவ

னுடைய கண்களில் இரண்டு மூன்று துளிகள் ஜ்வலித்து நின்று பலபல வென்று கீழே உதிர்ந்தன. ஆம்! பணத்தால் நிர்மாணிக்கப்பட்ட சமூகத்தில் ஏழையின் ஜீவனற்ற குரலை எப்படிக் கேட்க முடிகிறது? அல்லது அங்கே உணர்ச்சிகளுக்குத்தான் இடமேது? ஆனால், மனிதனுக்கு மனிதன் ஏதோ ஒரு விதத்தில் பிணைக்கப்பட்டிருக்கிறான். அதுதான் ஜீவசக்தி. ஏனெனில் எவ்வளவு மனமுடைந்து ஹமீத் திரும்பினனோ அவ்வளவு தூரம் கடைக்காரன் மனது இளகிவிட்டது. "பச்சைக் குழந்தை, ஏழு வயது பையனிடமா நமது பேரம்? சை" என்று நினைத்து ஹமீதைக் கூப்பிட்டான். இந்தா எடுத்துக்கொண்டு போ" என்று தூண்டிலை குழந்தையிடம் கொடுத்தான்.

ஹமீதின் சந்தோஷ சாகரத்திற்குக் கரையே காணப்படவில்லை. ஆற்றிற்கு ஓடினன். போட்ட தூண்டிலில் அதிர்ஷ்டம் தேங்கியிருந்தது. எவ்வளவு மீன்கள்! திரட்டி எடுத்துக்கொண்டு குதித்தோடி வந்தான் அம்மாவிடம். ஒரு கையில் தூண்டில் இன்னொரு கையில் மீன்கள். தாயார் பார்த்தாள். "உனக்கில்லையா அந்தக் காசு? அதைக்கொண்டு ஏன் தூண்டில் வாங்கினுய்?" என்று கேட்டாள்.

ஹமீத் தளர்ந்த குரலில் "அம்மா நாம் தினம் கஷ்டப்படுகிறோமே. சில நாள் பட்டினி கூட கிடக்கிறோமே. இனிமேல் தினம் ஏதாவது கொண்டு வாலாமல்லவா?" என்றான். தாயாருக்குப் பேச முடியவில்லை. ஹமீத்தைக் கட்டிக்கொண்டாள். குரல் தழதழத்தது. "பைத்தியக் காரக் குழந்தை" என்றாள்.

* * *

சளியோடு மழையில் அலைந்தது ஹமீதிற்கு அன்றிரவு ஜுரம் வந்து விட்டது. அப்துல் மறுநாள் தன் அண்ணனைப் பார்த்தான். அதுபோல் அவனை என்றும் கண்டதில்லை. படுத்துக்கொண்டிருந்தான் ஹமீத்! "அப்துல்! நீ இன்று மீன் பிடிக்கப் போகமாட்டாயா?" என்று அண்ணன் கேட்டான்.

கோலிகளை எல்லாம் பையில் போட்டுக் கொண்டு கிட்ட வந்தான் அப்துல். "தூண்டில் எனக்கு" என்றான். அண்ணன் தூண்டில் வாங்கியது முதல் தம்பிக்கு அதிலேயே கவனம். தனக்குக் கொடுத்தாலொழிய தான் மீன் பிடிக்கப் போகமுடியாது என்றும், இப்போது சத்தியாக்கிரகம் செய்தால் எதிரி இணங்கி விடுவான் என்பதும் அப்துலின் கருத்து.

"யாருடையதாயிருந்தாலென்ன, வீட்டு வேலை தடங்கலில்லாமல் நடந்தால்சரி" என்று ஹமீதிடம் குடிகொண்டிருந்தது நாம் எதிர்பார்க்கமுடியாத வேதாந்தம். "மீன் பிடிக்கப் போக மாட்டேன்" என்றான் அப்துல். தூண்டிலில் ஆரம்பித்த சண்டை கடைசியில் கோலியில் போய் முடிந்தது. அண்ணன் கோலிகளையெல்லாம் எடுத்துக்கொண்டு ஓடிவிட்டான் அப்துல்.

ஹமீத்துக்கு படிப்படியாக ஜுரம் ஜாஸ்தியாகிக் கொண்டே வந்தது. அக் கஞ்சிக்குக் கஷ்டப்படும் குடும்பத்தில் வைத்தியர்களுக்குக் கொடுக்க பணம் ஏது?

மறுநாள் சாயங்காலம். அப்துல் தன் அண்ணனிடம் வந்தான். ஹமீதின் அலங் கோலத்தைக் கண்டு ஏதோ சொல்ல முடியாத வேதனை அவனுக்கு உண்டாயிற்று. காரணமில்லாமல் "ஹமீத் அண்ணு" என்று மெதுவாகக் கூப்பிட்டான். "அப்துல்!" ஹமீத் மெதுவாகக் கண்ணைத்திறந்தான். "அம்மா கஷ்டப்படுகிறாள். நீ தான் மீன் பிடிக்கப்போக மாட்டேன் என்கிறுயே! என் தூண்டிலையும் எடுத்துக் கொண்டாயே" என்றான்.

"இல்லை! இல்லை !... இந்தா உன் தூண்டில்; பாவம் எனக்கென்னத்திற்குத் தூண்டில்..." என்று சொல்லி அருகில் உட்கார்ந்து ஹமீதின் கன்னத்தைத் தடவிக் கொடுத்தான் அப்துல். ஹமீத் கணைப்பில் கண்களை மூடிக் கொண்டிருந்தான். அப்போதுதான் தன் நிலையை ஒருவாறு உணர்ந்தான் அப்துல். அவன் மனம் 'படக் படக்'கென்று அடித்துக்கொண்டது. "ஐயோ! பயமாக இருக்கிறது," என்று அண்ணனை இறுகக் கட்டிக்கொண்டு படுத்துக் கொண்டான். சில நாழிகை கழித்து ஹமீத் கண்ணைத் திறந்தான். "அப்துல்!"

(186-ம் பக்கம் பார்க்க)

லக்ஷிமி

(ஸ்ரீ கே. வெங்கட்டராமன், பி. ஏ.)

'லக்ஷிமி' என்று கண்ணன் கூப்பிட்டவுடனே, தன் குழந்தைக்கு ஓர் இனிய முத்தம் அளித்துவிட்டு, "என் கண்ணே, நான் வயலுக்குச் சென்று, அந்தி நேரத்திற்குள் வந்துவிடுகிறேன். அதுவரையில் ஜாக்கிரதையாக இரு" என்று சொல்லிவிட்டு, லக்ஷிமி தன்னுடைய நண்பர்களின் கூட்டத்தில் சேரச்சென்ருள்.

கண்ணனும் ஒவ்வொன்ருக எல்லாவற்றையும் அழைத்துக்கொண்டு வயற்புறங்களை அடைந்தான். தான் தினமும் தங்கி இளைப்பாறும் அத்திமரத்தை அடைந்ததும், மேல் போட்டுக்கொண்டிருந்த அழுக்கடைந்த வஸ்திரத்தை எடுத்து கீழேவிரித்துவிட்டு, கையிலிருந்த கம்பால் மரத்திலிருந்த அத்திப்பழங்களை அடித்து உதிர்த்தான். துணியில் விழுந்த பழங்களை எல்லாம் ஒன்ருகச்சேர்த்து, மரத்தின் மேல் சாய்ந்துகொண்டு, ஒவ்வொரு பழமாக, தில்லாலே பாட்டு பாடிக்கொண்டு, தின்னலானன். பசுக்களும் அங்கங்கே உள்ள புல்களை தின்னச் சென்றன.

நடுப்பகல் கடந்து சூரியனும் மேற்கு திசையைநோக்கிச் சென்றுகொண்டிருந்தான். அவனுடைய செல்கையை ஆமோதிப்பவைபோல், பசுக்களெல்லாம் மேலும் மேயாமல், அங்கங்கே படுத்துக்கொண்டு அசை போட்டுக்கொண்டிருந்தன.

அச்சமயம் என்ன காரணத்தினலேயோ, லக்ஷிமிக்கு அதிக தாகம் ஏற்பட்டது. ஆகையால் அவள் ஒரு நீரோடையை தேடிச்சென்ருள். நீரோடை சிறிது தொலைவில் இருந்தபடியாலும், மற்ற பசுக்களெல்லாம் அசைவு போட்டு படுத்திருந்ததாலும் லக்ஷிமி மாத்திரம் தனியாகச் சென்ருள். நீர் நிலையை அடைந்ததும் தாகம் தீருமட்டும் நீரைப் பருகி கரையேறினள். அதுவரையில் ஏதேனும் ஒரு மிருகத்தின் வருகைக்காக காத்துக்கொண்டிருந்த புலியானது, லக்ஷிமியைக் கண்டு, அவளை மடக்கிக்கொண்டது.

"இனி நீ என்னைவிட்டு தப்பப்போவதில்லை. ஆகையால், மறுக்காமல், எனக்கு இரையாகியே தீரவேண்டும். மேலும் எனக்கே பசி இப்பொழுது காதை அடைக்கிறது" என்றது அப்புலி.

லக்ஷிமிக்கு இதைக் கேட்டதும், கதி கலங்கிவிட்டது! இனி என்ன செய்வது! புலிக்கு இறையாவது என்னவோ திண்ணம். தன்னுடைய அருங்குழந்தையை நினைத்த அளவில் அவள் கண்களினின்றும் நீர் அருவியாக விழுந்தோடிற்று. இப்படி அழுவதைக்கண்ட புலி,

"நீ அழுது பிரயோசனமில்லை," என்று தேற்றிற்று.

"நான் உயிருக்காக அழவில்லை. என்னுடைய அருமைக் குழந்தையை நான் இறந்த பிற்பாடு, யார் காப்பாற்றப் போகிருர்கள் என்பதை நினைக்கும் பொழுது தான் என்னல் துக்கம் தாளமுடியவில்லை. என் குழந்தை காப்பாற்றுவாரின்றி இறந்துபோக நேரிடுமே" என்று சொல்லி, மேலும் கதறினள்.

புலிக்கும் சிறிது மனம் இளகியது. ஆனல் அப்பொழுது அதற்கு பசி அதிகமாயிருந்தது. ஆகையால் அதுவும் மௌனமாய் நின்றது.

மேலும் லக்ஷிமி,

"அண்ணு! நீர் என்னைத்தின்னப் போவது என்னவோ திண்ணம். ஆகையால், தயவுசெய்து, கடைசி முறையாக

என் குழந்தையை பார்த்துவிட்டு விடை பெற்று வரும்படி அனுமதி கொடுங்கள்" என்று கேட்டாள்.

"அது முடியாது.. உன்னை எப்படி நம்புவது?" என்றுகேட்டது புலி.

"நான் ஒரு நாளும் சத்தியம் தவறின தில்லை. இனியும் தவறமாட்டேன். இது சத்தியம்! தயவுசெய்யுங்கள்" என்று மேலும் கெஞ்சினள்.

"எனக்கோ இப்பொழுது பசி அதிக மாயிருக்கிறது. மேலும் அந்திவேளை வந்தபிற்பாடு, அதாவது சூரியன் மறைந்த பிற்பாடு எதையும் உண்ணுவதில்லை என்ற ஓர் பிரதிக்ஞை கொண்டிருக்கிறேன்..."

"அப்படியானுலும் சரி. நான் அந்தி கழிவதற்குள் வந்துவிடுகிறேன். என் வார்த்தையை நம்பும். கடைசிமுறையாக என் அருங்குழந்தையைப் பார்த்துவிட்டு வரும்படி கிருபைகூறும்" என்று கெஞ்சி, துக்கம் தாளமாட்டாமல் கதறினள் லக்ஷிமி.

புலியின் மனது இளகிவிட்டது.

"சரி. அப்படியே செய்! நான் உனக்காக இங்கேயே காத்துக்கொண்டிருப்பேன். உன் வார்த்தை தவருமல், அந்தி கழிவதற்குள் வந்து என்பசியை ஆற்று" என்றது புலி.

உடனே லக்ஷிமியும் புலிக்கு ஓர் நமஸ்காரம் செய்துவிட்டு, மந்தையை நோக்கி ஓடினள்.

"சகோதரி, என்குழந்தையை நீதான் காப்பாற்றவேண்டும். அதைத்திட்டாதே, உன்குழந்தைகளைப்போலவே பார்த்துக் கொள்" என்று லக்ஷிமி ஒரு பசுவிடம் சொன்னுள்.

இதைக்கேட்டு எல்லா பசுக்களும், லக்ஷிமி தங்களை விட்டு பிரியப்போவதைக் கேட்டு, மனந்தாளாமல் கதறின.

"அம்மா, என் குழந்தையை முன்னுல் வந்தால் முட்டாதேயுங்கள். பின்னுல் வந்தால் உதைக்காதேயுங்கள்" என்று சொல்லி, துக்கம் தாளமாட்டாமல் மூர்ச்சை அடைந்து கீழே விழுந்தாள் லக்ஷிமி.

உடனே மற்ற பசுக்களெல்லாம் லக்ஷிமியின் மூர்ச்சையைத் தெளிவித்தன.

"இன்னும் கொஞ்ச நேரத்தில் அது தாயில்லாக் குழந்தையாகிவிடப் போகிறது. ஆகையால் நீங்களெல்லோரும் தான் அதற்கு தாய் போல் இருந்து, என் அருமைக் குழந்தையை காப்பாற்றவேண்டும்." என்றுள் லக்ஷிமி.

"லக்ஷிமி, அதற்காக நீ சிறிதும் கவலைப்பட வேண்டாம். எங்கள் குழந்தைகளைவிட அருமையாக வளர்க்கிறேம். எங்களுடைய பாலை உன் குழந்தைக்குக் கொடுத்து அதை எங்கள் கண்களின் இமைபோல் பாதுகாக்கிறேம். நீ சிறிதும் கவலைப்பட வேண்டாம். ஆனுல் உன் பிரிவு எங்களுக்கு மிகவும் வருத்தத்தை கொடுக்கிறது" என்று சொல்லி, எல்லா பசுக்களும் அழா நின்றன.

"நீங்கள் விசனப்படுவதில் பிரயோசனமில்லை. ஆறிலும் சாவு, நூறிலும் சாவு. ஆகையால் மன நிம்மதி கொள்ளுங்கள். மேலும் நான் என் வாக்கை நிலை நிறுத்த வேண்டும். ஆகையால், அந்திமுடிவதற்குள் புலியினிடம் செல்லவேண்டும். என் அருமைக் குழந்தையிடம் சென்று விடைபெற்றுக்கொள்ளுகிறேன்" என்று சொல்லிவிட்டு, இடையன் கண்ணுக்குத் தெரியாமல், மறைந்து, வீட்டை நோக்கி ஓடினுள்.

வீட்டிற்குச் சென்று, "என் கண்ணே" என்று லக்ஷிமி ஓடி தன் குழந்தையைக் கட்டிக்கொண்டாள். அக் கன்றுகுட்டிக்கு ஒன்றுமே புரியவில்லை. தினத்தைவிட சீக்கிரம் தன் தாய் வீடு திரும்பியதைக் கண்டு, அதற்கு ஆச்சரிய மேற்பட்டது.

"அம்மா, என்ன விசேஷம்? ஏது இன்று சீக்கிரமாக வந்துவிட்டாய்! ஏன் இப்படி அழுகிறுய்?" என்று அது மேலும், மேலும் கேட்கத் தொடங்கிற்று.

பதில் சொல்ல முடியாமல், மிக்க துக்கத்தினுல் லக்ஷமி அழ, கன்றும் அழ ஆரம்பித்தது. பிறகு லக்ஷிமி ஒருவாறு சமாளித்துக்கொண்டு, "என் கண்ணே, உன்னைப் பார்ப்பது இதுதான் கடைசி தடவையாகும். இனி நீயும் என்னைப் பார்க்கமுடியாது. நானும் உன்னைப் பார்க்க முடியாது." என்று சொல்லி, மேலும் சொல்ல நாவெழாமல் தவித்தாள்.

"அம்மா, என்ன அப்படிப்பட்ட செயல் நீ செய்துவிட்டாய்? நானும் உன்னுட

னேயே வந்து விடுகிறேன். நீ போன பிற்பாடு நான் தனியாக இருக்க மாட்டேன்! என்னை, உன்னைப்போல் யார் பார்த்துக் கொள்ளுவார்கள்? ஆகையால் நானும் வந்துவிடுகிறேன். என்னை விட்டு விட்டுப் போகாதே" என்று சொல்லி தன் தாயின் கால்களைக் கட்டிக்கொண்டது கன்று.

என்ன செய்வாள் லக்ஷிமி?

"என் கண்ணே! நான் கொடுத்த வாக்கைக் காப்பதற்காக இன்னும் சிறிது நேரத்திற்குள் செல்ல வேண்டும். சென்ற இடத்தினின்றும் நான் திரும்பப் போவதில்லை. உயிரினும் மேன்மையானது சத்தியமாகும். ஆகையால் நான் செய்துவிட்டு வந்த சத்தியத்தை நிறைவேற்ற வேண்டும்" என்றாள்.

"என்ன சத்தியம்? யாருக்கு? நான் போய் நிறைவேற்றி வருகிறேனே?" என்றது அச்சிறு கன்று.

இதைக் கேட்டதும், லக்ஷிமி, தன் குழந்தையைக் கட்டிக்கொண்டு கதறிய வண்ணம், புலியின் விஷயத்தை மட்டும் அதனிடம் சொல்லாமல், "உன்னால் அதை நிறைவேற்ற முடியாது. நான் போய்த்தான் ஆகவேண்டும். நம் இனத்தார்களிடமெல்லாம் சொல்லி இருக்கிறேன். அவர்களெல்லாம் உன்னை ஜாக்கிரதையாகப் பார்த்துக் கொள்ளுவார்கள். என்னைப்பற்றி இனி நீ வருந்துவதில் பிரயோசனமில்லை. சமத்தாக இருந்து, யாருடனும் சண்டை போடாமல் நல்ல பெயர் எடு. வயிறாரத்தின்று, அலையாமல், யாருடனும் வீண் சண்டைக்கு போகாமல் இரு. தலை போவதாயிருந்தாலும், சத்தியம் தவறாதே. சமத்தாய் இரு என் கண்ணே! நான் உன்னோடு இருப்பதற்குக் கொடுத்து வைத்தது இவ்வளவு தான்" என்று புத்தி சொன்னாள்.

கன்று இவ்வார்த்தைகளைக் கேட்டு, மூர்ச்சை அடைந்தது. மூர்ச்சை தெளிவித்து, தனக்கு புலியிடம் போக அனுமதி கொடுப்பதற்குள் அந்தி கழிந்து விடுமோ என்று பயந்து லக்ஷிமி தன்னுடைய கடைசி முத்தத்தை குழந்தைக்கு அளித்துவிட்டு, வயலை நோக்கி ஓடினாள்.

அந்தி கழியும் நேரமாயிற்று. "நமக்கோ பசி காதைத்துளைக்கிறது. அப்பசுவை போக விட்டது சுத்த பிசகு. சத்தியம் செய்தது? சத்தியமாம், சத்தியம்! அதன் வார்த்தையை நம்பி மோசம் போனோம். இனியாவது நாம் இப்படி நம்பி மோசம் போகலாகாது. இனியா!... இனி!... இனி நாம் உயிரோடிருந்தால்தானே! இப்பசியே, அதன் பசி தீர, என்னையே இன்னம் கொஞ்ச நேரத்தில் புசித்து விடும் போலிருக்கிறதே!" என்று புலியானது தனக்குத்தானே சொல்லிக் கொண்டு, மிக்கக் கஷ்டத்துடன், அங்கீரோடையின் கரையில் படுத்துக்கொண்டிருந்தது.

"அண்ணா" என்ற குரல் கேட்டவுடன் திடுக்கிட்டு, புலி திரும்பியது.

லக்ஷிமி இறைக்க, இறைக்க ஓடிவருவதைக் கண்டது.

"புலி அண்ணாவே! அந்தி கழியும் நேரமாகி விட்டது. உங்களுடைய பிரதிக்ஞைக்கும், என்னுடைய சத்தியத்திற்கும் பங்கம் ஏற்படாமல், உடனே என்னை புசியுங்கள்" என்று சொன்னாள் லக்ஷிமி.

புலி பார்த்தது. அதற்கு என்ன செய்வது என்றே புரியவில்லை! பசுவோ தன்னுடைய சத்தியத்திற்காக அஞ்சி, பொழுது கழிவதற்குள், புலிக்கு இரையாவதற்காக வந்திருக்கிறது. புலிக்கும் அசாத்திய பசி. சிறிது நேரம் புலியின் மிருகத்தன்மைக்கும், சாத்விக தயாளத் தன்மைக்கும் ஓர் சிறிய போர் நடந்தது. கடைசியில், தயாளம் வெற்றி பெற்றது.

"பசுவே! உன்னுடைய வாக்கு தவறாமல், நீ வந்ததைக் கண்டு நான் மிகவும் சந்தோஷப் படுகிறேன். உன்னுடைய குழந்தை உன் பிரிவால் எவ்வளவு வருத்தப்படுகின்றதோ! சத்தியத்தை நிலைநாட்ட நீ செய்ய வந்திருக்கும் இத்தியாகம் என் மனதை உருக்கி விட்டது. எனக்கு அறிவை ஊட்டிய தாய்போல் ஆனாய்! உன்னுடைய உண்மையின் திறனைக் கண்டு, நான் அஞ்ஞானத்தினின்றும் விடு பெற்றேன். இனி எனக்கு இவ்வுலகில் ஒன்றுமில்லை. நீ சென்று, உன் செல்வக் குழந்தையுடன் இன்புற்றிரு" என்று சொல்லி, அப்புலி, லக்ஷிமியை மூன்று தரம் சுற்றிவந்து வந்தனம் செய்து, அனுப்பியது.

கலை அனுபந்தம்

ஹம்பியில் இரண்டு நாட்கள்

(ஸ்ரீ ரா. ஆறுமுகம்)

(தொடர்ச்சி)

ஹம்பியின் எல்லைக்கோட்டையை ஒரு நாள் முழுதும் சுற்றிப் பார்த்துவிட்டு இரண்டாம் நாள் நகரினுள் பிரவேசிக்க வேண்டும். நகருக்குள் செல்லும் வழியின் வலப் பக்கத்தில் பூமிக்கடியில் ஓர் பெரிய சிவாலயமிருக்கிறது. அதன் மேல்தளம் பூமி மட்டத்திற்குச் சரியாயிருக்கிறது. ஆலயம் முழுதும் 3 அடி ஆழம் தண்ணீர் ஊறிப் பெருகித் தெப்பக்குளம் போலிருக்கிறது. சூரிய உஷ்ணமே உட்புக முடியாமலிருக்கிறபடியால் தண்ணீர் பனிக்கட்டியைப்போல் குளிர்ந்திருக்கிறது. கோவில் முழுதும் சுற்றிவிட்டு வெளியேறுவதற்குள் காலில் உணர்ச்சியே இல்லாமல் போய் விடுகிறது. அவ்வளவு குளிர்ச்சி.

இக்கோவிலிலிருந்து ஒரு மைல் சுற்றளவிற்குள் கருங்கற்களாலேயே கட்டப்பட்ட மூன்று கோட்டைகள் தனித்தனியாய்க் காணப்படுகின்றன. கோட்டைகளின் சில பாகங்கள் நாசப்படுத்தப் பட்டிருக்கிறதானாலும் அவைகள் இன்னும் கட்டி முடிக்கப் பெறாத பாகங்களாகவே நமக்குத் தெரிகிறது. அவ்வளவு உறுதியாக, எந்தப் பீரங்கிக் குண்டுக்கும் அசையாமல் நின்றிருக்கின்றன. கோட்டைச் சுவர்களின் அகலம் சுமார் 4 அடி இருக்கிறது. ஒவ்வொரு கோட்டையின் மூலையிலும் வாயிற் காப்போனின் கோபுரம் ஒன்று தென்படுகிறது. அவை ஒவ்வொன்றும் சென்னையிலுள்ள கலங்கரை விளக்கத்தில் (Light House) முக்கால் பங்கு உயரமிருக்கிறது. அதன்மேல் ஏறிச் செல்லும் படிகள் வளைந்து வளைந்து செல்கின்றன. கோபுரத்தின் உச்சியில் விஸ்தாரமான இடம். நான்கு பக்கங்களிலும் பெரிய திறந்த ஜன்னல்களோடு கூடியதாய் வெகு அழகாக அமைந்திருக்கிறது. அதினின்று பார்த்தால் சுமார் 20 மைல் சுற்றளவிற்கு மூன்று பக்கங்களிலும் மலைகளும் குன்றுகளும், வடபாகத்தில் வற்றாது ஓடும் துங்கபத்ராவின் வெள்ளப் பெருக்கும், அதன் சிற்றோடைகளும், பசுமையான வயல்வெளிகளும் கண்களுக்கு ஓர் இனிய விருந்தாக விருக்கின்றன. இக்கோபுரங்களிலிருந்து தான் அக்காலத்தில் விரோதிகளின் படைகள் வருவதை அறிந்து கொள்வார்கள் போலும்.

முதல் கோட்டைக்குள் ராணியின் அந்தப்புர மஹாலும் ஸ்நான மண்டபமுமிருக்கின்றன. ராணியின் மஹால் இரண்டு அடுக்குகள் கொண்ட ஓர் நீண்ட ஹால். அக்காலத்து வழக்கப்படி, அரச சபையில் ஏதேனும் விசேஷ சம்பவங்கள் நிகழுங்கால், ராணியும் மற்றவர்களும் பலகணிகள் வழியே கவனிப்பது வழக்கமல்லவா? அந்த முறையிலேயே இது கட்டப்பட்டிருக்கின்றது. ஸ்நானக் குளத்தைச் சுற்றி மூன்றடுக்குகள் கொண்ட வட்ட வடிவமான ஒரு சிறு மண்டபத்தில் அக்காலத்தில் தீட்டப்பெற்ற வர்ண ஓவியங்கள் இன்னும் மங்கிக் கெட்டுப் போகாமல் பாதுகாக்கப்பட்டு வருகின்றன. குளம் இப்போது வரண்டு கிடக்கிறது. தண்ணீர்நிறைய இருந்தால் மூன்றாவது மாடியிலிருந்துகூட கீழே குதித்து மூழ்கி ஆனந்திக்கலாம் போலிருக்கிறது. அக்காலத்து ராணிகளும் அப்படித்தான் செய்வார்கள் என்பது கட்டிட அமைப்பிலிருந்தே தெரிய வருகிறது.

முதல் கோட்டையிலிருந்தே இரண்டாவது கோட்டைக்குள் செல்ல ஒரு சிறு வழியிருக்கிறது. இதற்குள் அடி எடுத்து வைத்ததும் நம் முன் ஒரு பிரம்மாண்டமான மாளிகை தென்படுகிறது. அதைப் பார்க்காதவர்கள் சென்னையிலுள்ள எழும்பூர் ரயில்வே ஸ்டேஷனை நினைத்துக் கொண்டால்போதும். கற்களாலேயே கட்டப்பட்ட அவ்வளவு பெரிய கட்டிடத்தை திடீரென்று கண்டதும் நம்மையுமறியாமல் ஆச்சரியம் மேலிடுகிறது. பக்கத்தில் சென்று பார்த்ததும் அது யானைகள் கட்டும் இடம் என்று தெரிகிறது. பத்து யானைகள் கட்டுவதற்கு பத்துப் பெரிய 'மாளிகை'கள் நிர்மாணித்திருக்கிறார்கள். இதிலிருந்தே அக்காலத்து அரசர்களின் செல்வாக்கை நிர்ணயித்து விடலாம். ஹம்பியிலுள்ள மற்றெல்லாக் கட்டிடங்களிலும் இது ஒன்றுதான் அன்று கட்டியது போலவே ஒரு சிறு பாகம் கூட சேதமடையாமல் தப்பி நிற்கிறது. யானைகளின்முன் பின் கால்களை சங்கிலியால் கட்டுவதற்கு ஊன்றியிருக்கும் துளையடித்த கற்களும், இலை தழைகள் போட்டுவைக்க தனித் தொட்டிகளும், எல்லாம் அவ்வளவு தத்ரூபமாக

அமைந்திருப்பதைப் பார்த்தால், யானைகளெல்லாம் இப்போது எங்கோ வெளியில் சென்றிருக்கின்றன என்றே நமக்குத் தோன்றுகிறது. இதன்மேல் தளத்திற்குச் சென்று பார்த்தாலோ நம் ஆச்சரியம் அளவு கடக்கிறது. ஒவ்வொரு யானையின் இருப்பிடத்திற்குமேலும் (எழும்பூர் ஸ்டேஷனில் மேலுள்ள கோபுரங்களைக் காட்டிலும் பெரிதாக) ஒவ்வொரு கோபுரமும், அதன்மேல் கலசங்களும் காணப்படுகின்றன. எவ்வளவு பொருள் செலவுசெய்து கட்டினார்களோ ? ஆனால் அதில் இன்று ஒரு யானைகூட இருக்கக் கொடுத்து வைக்கவில்லையே! துரதிர்ஷ்ட யானைகள்! மாவுத்தர்கள் தங்குவதற்கும் தனியாக ஒரு பெரிய இடமிருக்கிறது.

அரண்மனைக் கதவு





சிவாலயத்தின் முன் மண்டபம்

இரண்டாவது கோட்டையிலிருந்து மூன்றாவது கோட்டைக்குள் போவதற்கும் ஒரு வழியிருக்கிறது. இதற்குள்ளிருப்பது மூன்று ஆலயங்கள்தான். இரண்டு பெரிது; ஒன்று சிறிது. சந்திரசேகரர் ஆலயத்தின் முன்பாகம் மண்டபமே இல்லாமலிருக்கிறது. முன்வாசலில் இரு பக்கங்களிலும் கை, கால், தலைகளில்லாத விக்கிரகங்களாக நூற்றுக் கணக்கில் குவித்து வைத்திருக்கிறார்கள். ஒரு விக்கிரகமாவது முழு உருவத்தோடு இல்லை. இவைகளைப் பார்த்தவுடன் யுத்த களத்தில் கிடக்கும் போர்வீரர்கள் ஞாபகம்தான் நமக்கு வருகிறது. இதற்கடுத்துள்ள ஸ்ரீ ராமச்சந்திரர் கோவில் இன்னும் கும்பாபிஷேகம்கூட ஆகாததுபோல, அவ்வளவு புத்தப் புதிதாகக் காணப்படுகிறது. கோவிலின் உயர்ந்த வெளிச் சுவர்களில் நம் தமிழ்நாட்டுக் கோவில்களில் காணப்படுவதுபோல் சுண்ணும்பும், காவியும் பட்டை பட்டையாய் அடிக்காமல் ரதம், கஜம், துரகம், பதம், என்ற நால்வகைச் சேனைகளை வரிசை வரிசையாக கற்களிலேயே மிக நேர்த்தியாக சித்தரித்திருக்கிறார்கள். போர்க்களத்தை நோக்கி உற்சாகத்தோடும், ஆவேசத்தோடும் அப்படைகள் செல்லுவதே போல் எவ்வளவு ஜீவகளையோடு அவைகள் காட்சியளிக்கின்றன என்பதை எப்படி வர்ணித்துக் காட்டுவது? கற்களில் தான் எவ்வளவு நுட்பமான வேலைப்பாடுகள்! அக்காலத்துச் சிற்பிகள் இவைகளை யெல்லாம் வெறும் பாறைக் கற்கள் என்று நினைக்காமல் வைரக் கற்களுக்கு பட்டை செதுக்கி மெருகிடுவது போல் நினைத்திருப்பார்கள் போலும்! பொன் நகைகளில்கூட இவ்வளவு 'நகாஸ்' வேலைகளை

நாம் காண முடியாது. இவைகளைப் பார்த்துக் கொண்டே ஒரு நாள் முழுதும் நின்றால்கூட சலிப்பேற்படாது. கோவிலினுள்ளே சென்று உட்பக்கச் சுவர்களை நோக்கினாலோ, ராமாயணம் முழுதும் அப்படியே சித்தரிக்கப்பட்டிருக்கிறது. ஆனால் கோவிலில் மூல விக்கிரகம் தான் காணப்படவில்லை.

இதற்கு இன்னும் சற்று தூரத்தில் இருக்கும் சிறு கோவிலிலும் மூலஸ்தானம் காலியாகக் கிடக்கிறது. ஆனால் வாயிலில் 9 அடி நீளம் 6 அடி அகலத்தில் ஒரு பலகைக் கல்லில் ஹனுமானின் உருவம் செதுக்கப்பட்டிருக்கிறது. மூல ஸ்தானத்திலிருந்த இந்த விக்கிரகத்தை படையெடுத்து வந்தவர்கள் வெளியே தூக்கி எறிந்தார்களா, அல்லது அதை அங்கு கொண்டுபோய் வைத்துப் பிரதிஷ்டை செய்யும் முன்பே யுத்தம் ஆரம்பித்து விட்டதா என்பது தெரியவில்லை. துங்கபத்ரையின் வடகரையில் இருப்பதுதான் ஹனுமானின் ஜன்ம பூமியாகிய கிஷ்கிந்தை. ஆதலின் ஹனுமானின் உருவங்கள் ஹம்பியில் பல இடங்களிலும் தென்படுகின்றன—நம் ஊர்களில் விநாயகர் தென்படுவது போல.

மூன்று கோட்டைகளையும் சுற்றிப் பார்த்தானதும், கோட்டைக்கு வெளியே சில முடிவு பெறாத கட்டிடங்கள் நம் கவனத்தைக் கவர்கின்றன. அவைகளில் ஆறுதான் முக்கியமானவை (1) பொது மக்களின் ஸ்நான வசதிக்கென நிர்மாணிக்கப்பட்ட பெரிய தெப்பகுளம். (2) பிரம்மாண்டமான கொலு மண்டபம். (3) அரண்மனை கட்ட வேண்டி எழுப்பிய அஸ்திவாரம். (4) 42 அடி நீளம் 3 அடி அகலத்தில் ஒரே கல்லில் வெட்டப்பட்டிருக்கும் தண்ணீர்த் தொட்டி. (5) விரோதிகள் நகரைக் கைப்பற்றியதும் இராஜ வம்சத்தவர்கள் தப்பிச் செல்ல ஏற்படுத்தப்பட்ட இரகசியச் சுரங்க வழிகள். (6) ஒரே கல்லில் வெட்டிய அரண்மனைக் கதவு, முதலியவைகள்.

ஹம்பி முழுதும் பார்த்து முடித்துவிட்டு கொலு மண்டபத்தில் அரசன் வீற்றிருக்கும் இடத்தில் வந்து நின்று மேற்கில் திரும்பிப் பார்த்ததும், அப்போதுதான் ஆதவனும் தன் பொன் கிரணங்களை வாரி இறைத்துக் கொண்டு குன்றுகளுக்குப்பின் மறைந்து கொண்டிருக்கக் கண்டேன். அவன் கிரணங்கள் பட்ட ஹம்பி நகரம் முழுதுமே பொன்னகராக ஜ்வலித்தது. அப்போது என்னையுமறியாமல் உண்டாகிய உணர்ச்சி வேகத்தில் அவ்வளவு உயரத்திலிருந்து கீழேகூடக் குதித்து காலை ஒடித்துக் கொண்டிருப்பேன். ஆனாலும் திடப்படுத்தி நின்றுகொண்டு, 800 ஆண்டுகளுக்கு முன்னர் அரசாண்ட நம் அரசர்களின் கலைப் பித்தையும், தெய்வ பக்தியையும், மனோவலிமையும், ராஜரீகத்தையும் புகழ்வதா, அன்றி வெறும் பாறைகளாகக் கிடந்தவைகளுக்கு உயிர் ஊட்டிய சிற்பிகளைப் புகழ்வதா என்று யோசித்துக் கொண்டே போய், நாமும் நம் நாடும் தற்சமயமிருக்கும் நிலைமையை நினைத்ததும் ஒரு பெருமூச்சு விட்டுத் தலைகுனிந்து கொண்டேன். அவ்வளவு காலம் தர்மராஜ்யம் பரிபாலனம் செய்து இன்று நமக்கு ஒரு அழியாத பொக்கிஷத்தையும் வைத்து விட்டுச் சென்ற நம் மூதாதையர்களுக்கு நாம் இன்று செய்ய வேண்டிய கைம்மாறு அக்கலைப் பொக்கிஷங்களையும், அங்கு இயற்கையன்னை களிக் கூத்தாடும் காட்சியையும் கண்டானந்திப்பதேயாகும்.

இதோ கதிரவனும் மறைந்து விட்டான். சற்று நேரத்திற்குமுன் பொன்னகராகக் காட்சியளித்த ஹம்பி நகரில் இருள் சூழ்ந்து விட்டது.

(174-ம் பக்கத் தொடர்ச்சி)

ஜா :—என்னண்ணு, பொணத்துக்கு உயிர் கொடுக்கரே, உண்மைதானா?

முத்தன் :—(ஓடிப்போய் அவன் காலில் விழுந்து) சாமி! நெசமாவுங்களா? என் தூண்டில்லெ சிக்கின மீன்கூட இப்பிடித் துடிச்சிருக்காதுங்க. உண்மையாவா?

சூ :—ஆமப்பா! உன் மோதிரத்தினாலே எனக்கும் சன்மானம், உனக்கும் ஏராளமான செல்வம். இந்தா வாங்கிக்கொள்.

முத்தன் :—ஆகா! துஷ்யந்த மஹாராசா நல்லாருக்கணும்!

ஆண்டவனே! (கைகூப்பி ஆகாயத்தை நிமிர்ந்து பார்த்து மெல்லிய குரலில்) சந்திரா, உன் களங்கம் உன் வம்சத்திலே பரவல்லே!

வாழ்க்கைப் போராட்டம்

(ஸ்ரீமதி செல்லம்)

பர்த்தாவுக்கேற்ற பதிவிரதையாக வாழவேண்டு மென்பதே கமலினியின் எண்ணம். தினமும் படுக்கையில் படுக்கும்போது அவள் மிக்க மனக் கசப்புடனேயே படுக்க நேரிடும். ஆனல் சுந்தரம் இரவிற்குள் எப்படியாவது அவளை சமாதானப் படுத்திவிடுவான். காலையில் எழுந்திருக்கையில் தனக்கு சமானமானவர்கள் இல்லை என்னும் சந்தோஷமுடன் எழுந்திருப்பாள். ஆனல் இரவு படுக்கும் பொழுது பழைய கதையே.

"காலை எழரை மணி ஆகிவிட்டதே! இன்னுமா தூங்குகிறீர்கள். எழுந்திருங்கள்" என்ருள் கமலினி.

சுந்தரம் கண்களை மூடிக்கொண்டே "இதோ எழுந்துவிட்டேன். மேஜையின் மேல் காப்பியை கொண்டுவந்துவை" என்ருன்.

"நான் காப்பியை கொண்டுவந்து வைக்கவேண்டுமே தவிர நீங்கள் எழுந்திருக்கப்போவதில்லை. நீங்கள் எழுந்தபின் தான் கொண்டுவருவேன்" எனக்கூறி உள்ளே சென்ருள். மணி எட்டரை ஆயிற்று. அப்பொழுதும் சுந்தரம் எழுந்தபாட்டைக்காணேம். கமலினிக்கு ஆத்திரம் பொங்கியது. தனது கோபத்தைக் காண்பிக்க எண்ணி படீரென கதவைத் திறந்தாள்.

சுந்தரம் திடுக்கிட்டு எழுந்து "அடே அப்பா! அதிர்வேட்டு போட்டுதாக்கும் என்று நினைத்தேனே! நீதாஞ? இது வாடகை விடு என்பது ஞாபகமிருக்கட்டும். வீட்டுக்காரன் போனமாத வாடகைப் பணம் வாங்க வரும்போது ஏன் இந்த உள்ளின் நிலை இப்படி ஆடுகிறது என்று கேட்டான். இந்தமாதம் வேறு நிலை வைத்து கட்டிக்கொடு என்பான்" என சிறிது சிரித்துக்கொண்டு கூறினன். கமலினி கோபத்துடன் "போதும் என்னை கேலி செய்தது. காப்பி எப்பொழுது குடிப்பது, சாப்பாடு எப்படி சாப்பிடுகிறது? இனியாவது குளிக்க எழுந்திருங்கள்" என்ருள்.

"உத்தரவு! முதலில் காப்பியை கொண்டுவா? எல்லாம் இந்த வாயினலேயே சாப்பிட்டுவிடுகிறேன். இதிலொன்றும் கண் கட்டிவித்தை இல்லை. மலைக்காதே" என்று எழுந்திருந்தான்.

மணி ஒன்பதாகியது. அப்பொழுதும் சுந்தரம் குளிக்காமல் பேபர் வாசித்துக் கொண்டிருந்தான். கமலினிக்கு துக்கமும் அழுகையும் சேர்ந்து வந்தது. இந்த சோம்பேரியுடன் எப்படி ஆயுள் முழுவதும் காலந்தள்ளுவதென தன்னையே சபித்துக் கொண்டாள்.

"ஏன்! உங்களைத்தானே! மணி ஒன்பதரை ஆகிவிட்டதே. கண் தெரியவில்லையா? பதினெரு மணிக்கு ஆபீஸில் இருக்கவேண்டாமா? மூன்று மைல் வண்டியில் லொங்கு லொங்கென்று போய் ஆகவேண்டுமே. இன்னும் படுத்துக் கொண்டிருந்தால் எப்படி?" என்ருள். அவள் கண்கள் கலங்கின.

(179-ம் பக்கத் தொடர்ச்சி)

என்று கூப்பிட்டான்! சடக்கென அப்துல் எழுந்தான்.

"ஏன்... ஹமீத்!"

"நாளைக்குமீன் பிடிக்கப் போகிருயா?... அம்மாவைத் திண்டாட விட்டுவிடாதே!"

அதற்கு பதில் வருவதற்குள் ஹமீத் மயங்கி விட்டான். அப்துல் சுற்றுமுற்றும் பார்த்தான்.

மூலையில் புகைந்து கொண்டிருந்த சிமிணியின் மங்கிய ஒளி எப்படியோ கடவுளை ஞாபகப் படுத்திற்று. ஹமீதின் கைகளைத் தன் கையில் பிடித்துக்கொண்டு மண்டியிட்டான்.

"லா இலல்லா ஹூ அல்லாமுகம்மது...."

அவன் தொட்டுக்கொண்டிருந்த உஷ்ண சரீரம் திடீரென ஜில்லிட்டது. அந்த குளிர்ச்சி அப்துலின் ஹ்ருதயம் வரையில் பாய்ந்தது.

"ஏன் உங்களைத்தானே என்றுயே. யாராவது வந்திருக்கிறார்களோ வென்று பார்த்தேன். சரி, இலைபோடு. சாயங் திரம் வந்து ஸ்நானம் செய்து கொள்கி றேன்" எனக்கூறி சாப்பிட்டுவிட்டு ஆபீ ஸிக்கு சென்றுவிட்டான்.

மாலை அவன் வருவதற்குள் இரவிற்கு வேண்டிய சமையலையும் தயாரித்து, அவன் வந்தவுடன் சாப்பிட காப்பி டிப னையும் செய்துவைத்து குழாயடியில் சோப்பு சவுக்கங்களைக் கொண்டுபோய் வைத்து காத்துக்கொண்டிருந்தாள் கம லினி. அவன் இருக்கும்பொழுது நேரும் சிரமங்களை எல்லாம் உடனே மறந்து விட்டு அவன் பிரிவை நினைத்து வருந்து வது கமலினியின் சகஜமான ஸ்வபாவம்.

மாலை ஐந்து மணிக்கு சுந்தரம் சோர் வுடன் வந்து ஈஸி சேரில் சாய்ந்துகொண் டான். கமலினி அவனுக்கு ஐந்து நிமி ஷம் விசிறி, சிரம பரிகாரம் செய்வித்து விட்டு "குளிக்க எழுந்திருங்கள். நீங்கள் ஸ்நானம் செய்வதற்குள் நான் பலகாரம் கொண்டு வருகிறேன்" என்றாள்.

"கமலினி! நான் குளிக்கப்போவதில்லை. பலகாரத்தை கொண்டுவா" என அழுத்த முடன் கூறினான் சுந்தரம்.

"நன்றாயிருக்கிறது. இந்த வெய்யல் நாளில் எல்லோரும் தினம் மூன்று தரம் ஸ்நாநம் செய்கிறார்கள்! நீங்கள் ஒருதர மாவது குளிக்க வேண்டாமா? நாற்றம் எடுத்து விடாதா? தயவு பண்ணி எழுந் திருங்கள்."

"நான் வாஸனை ஸெண்டுகள் நிறைய வாங்கியிருந்தேனே. அதைத் தடவிக் கொண்டால் போகிறது. நான்தான் உலகத் துக்கு விலக்காச்சே. இன்று நிச்சயம் ஸ்நாநம் செய்யப்போவதில்லை." (உண்மை யில் அவன் ஆபீஸில் இடை வேளையில் ஸ்நாநம் செய்திருந்தான். அதை அவ ளிடம் கூறினால் அவள் மனம் கஷ்டப்பட டிராது. அவனுக்கு அவள் கோபிப்பதை பார்ப்பதில் தான் ஆனந்தம். ஆதலால் சொல்ல இஷ்டமில்லை.)

கமலினி மிக்க ஆயாசமுடன் அவனுக்கு வழக்கம் போல் செய்பவைகளை செய்து கொண்டிருந்தாள். இரவு சுந்தரம் பாதி சாப்பிட்டுக் கொண்டிருக்கையில் கமலினி மெதுவாக சமாசாரங்களை எடுக்க ஆரம் பித்தாள்.

"மூன்று நாளாக பெருங்காயம் இல்லா மல் சமையல் நடக்கிறது."

"அடாடா! நீ இவ்வளவு கெட்டிக்காரி என இவ்வளவு நாளாய் தெரியாமல் போய் விட்டதே. பெருங்காயமே இல்லாமல் இவ் வளவு நன்றாய் சமையல் செய்கிறாயே. நளபாகம் தான் போ!"

"என்னை மட்டம் தட்டுவதே உங்கள் தொழில். நாளை சமையலுக்கு புளியும் கிடையாது. ஒவ்வொன்றிற்கும் ஏதாவது சமாதானம் சொல்லி விடுகிறீர்கள். ஒரு நாள் சோம்பலை விட்டு எல்லா சாமான்களை யும் வாங்கி எறிந்துவிட்டீர்களானல் ஒரு மாதத்திற்கு வாயைத் திறக்காமல் கிடப் பேன்" என்றாள். இது கூறி முடிக்கு முன் துக்கம் அவள் தொண்டையை அடைத்துக்கொண்டது.

"அட அசடே! இதற்காகவா இப்படி கண்ணைக் கசக்குகிறாய். நீ புத்திசாலி என் றல்லவா நினைத்தேன். இவ்வளவு தானா? பெருங்காயம் இல்லாமல் சமையல் நன்றாய் செய்யும் உனக்கு புளி இல்லாமல் தான செய்யத் தெரியாது. போகட்டும், சாமான் களை வாங்கி எறிந்து விட்டால் உனக்கு பொறுக்குவது சிரமமாச்சே என்று தான் பார்க்கிறேன். நாளைக்கு கட்டாயம் வாங்கி எறிந்துவிடுகிறேன். பிறகு உன்னிஷ்டம்."

"சரி, நாளை பொழுது விடிந்த பிறகு தானே இந்தப் போராட்டம். உங்கப்பா விடமிருந்து கடிதம் வந்து இரண்டு வார மாச்சே. அதற்காவது பதில் எழுதினீர் களா? ஏதோ நான் சொல்லிக்கொடுத்து விட்டேனென்று தானே நினைப்பார்கள். நான் இங்கு திண்டாடுவது அவர்களுக்கு எப்படித் தெரியும்."

"அவர்கள் நினைப்பதெல்லாம் ஜோஸி யம் மூலியம் தெரியுமா? அல்லது யக்ஷிணி சொல்லுமா? இன்னும் ஒரு வாரத்திற்குள் நிச்சயம் பதில் எழுதி விடுகிறேன். ஆபீ ஸில் வேலைத் தொந்திரவு என எழுதி விட்டால் சரியாய்ப் போய்விடுகிறது: உன் னைச் சொல்ல அவர்களுக்கு பைத்தியமா பிடித்திருக்கிறது?"

"பைத்தியம் பிடித்திருக்கிறதோ இல் லையோ. எங்கம்மாவும் அந்த ஊரில்

இல்லாமலிருந்தால் நான் யக்ஷிணி ஜோஸ்யம் எல்லோருடைய உதவியும் நாட வேண்டியிருக்கும். அம்மா அவ்விடமே யிருப்பதால் அவையொன்றும் தேவை யில்லை. இன்று அம்மாவிடமிருந்து கடிதம் வந்தது. நேற்று மாமனுர் வாசல் திண்ணையில் உட்கார்ந்துகொண்டு 'அந்த சாண் நீளம் சிறுக்கி ஏதோ போட்டு என் குழந்தையை மயக்கிவிட்டாள். குழந்தை யிடமிருந்து மாதம் ஒரு கடிதம்கூட வருவது அருமையாய்ப் போய்விட்டது' என்ருரும். அவருக்கு நான் சிறுக்கியாகவும், நீங்கள் குழந்தையாகவும் போய்விட்டீர்கள்" என்று கூறி முடிக்கு முன் அவள் கண்கள் கண்ணீரை ஆருய் ஓடவிட்டது.

அதற்குமேல் விளையாட சுந்தரத்திற்குப் பொறுமையில்லை. எச்சிற்கையை உதறிவிட்டு அவளை அணைத்து சமாதானப்படுத்தி நாளை முதல் தான் சரியாக நடப்பதாகவும், டயம் டேபிள் ஒன்று எழுதி மாட்டிவிடப் போவதாகவும், அவளுக்கு தைரியம் கூறி, சீக்கிரம் சாப்பிட்டுவிட்டு கூடத்திற்கு வரும்படி கூறிச் சென்ருன்.

டயம் டேபிள் கூடத்தில் பெரிய அட்டையில் எழுதித் தொங்குகிறது. நடப்பது எப்படி என்று எண்ணுகிறீர்கள்?

'வரவிக்கிரய'த்தில் ஒரு காட்சி

புத்தக விமர்சனம்

கல்ப ஸம்ஸாரமாலா—4, தமிழ். ஆசிரியர் — ஸ்ரீ. கா. ஸ்ரீ. ஸ்ரீநிவாஸாசாரியார். வெளியிட்டவர்—ஸரஸ்வதி பிரஸ், காசி. (விலை, 0-8-0)

காலம் சென்ற புகழ்பெற்ற ஹிந்தி எழுத்தாளரான ஸ்ரீ ப்ரேம் சந்த் அவர்களின் ஸரஸ்வதி பிரஸ் ஸிலிருந்து வெளியாகும் கதைத் தொகுதியின் நான்காவது புத்தகமான இது, 11 தமிழ்ச் சிறுகதைகளின் ஹிந்தி மொழிபெயர்ப்புக்களைக் கொண்டது. முதற் புத்தகத்தில் ஹிந்திச் சிறுகதைகளும் இரண்டாவது மூன்றுவது புத்தகங்களில் வங்காளி, குஜராத்திச் சிறுகதைகளின் மொழிபெயர்ப்புகளும் ஏற்கனவே வெளிவந்துள்ளன. இனிமேல் மற்ற முக்கிய இந்திய பாஷைகளுக்காக 5 தனிப் புத்தகங்களும், நான்கு சிறு இந்திய பாஷைகளுக்காக ஒரு புத்தகமும், ஆங்கிலம் முதலிய மேனுட்டுபாஷைகளுக்காக ஒரு புத்தகமும், இப்படி மொத்தம் 11 புத்தகங்கள் வெளியிடுவதாக உத்தேசம். நல்ல காகிதம், அழகிய அச்சு பக்கங்கள் ஒவ்வொரு புத்தகத்திலும் சுமார் 200. விலை 8 அணுவென்று குறைவாகவே வைத்திருக்கிறார்கள். முழுத் தொகுதியும் வாங்குபவர்களுக்கு 6 அணு. இதேமாதிரியான ஒரு சிறு கதைத் தொகுதி தமிழிலும் ஏன் வெளிவரக் கூடாது?

இந்தப் புத்தகத்தின் ஆசிரியரான ஸ்ரீ கா. ஸ்ரீ. ஸ்ரீநிவாஸாசாரியார் தன் வேலையை மிக்க திறமையுடன் செய்து முடித்திருக்கிறார். இதிலுள்ள 11 கதைகளும் ஒவ்வொரு விதத்தில் சிறப்புற்று விளங்குகின்றன. காலம் சென்ற சிறு கதையாசியர்களுள் ஸ்ரீ மாதவையா மாத்திரமே இந்தப் புத்தகத்தில் வந்திருக்கிறார். ஸ்ரீ வ. வே. சு. ஐயரும் வந்திருந்தால் எவ்வளவோ நலமாயிருந்திருக்கும். இவர் ஒருவரைத் தவிர மற்றப் பத்து ஆசிரியர்களும் இப்போது தமிழ்ச் சிறு கதை உலகத்தில் ரத்தினங்களாக விளங்குபவர்கள்' மாதவையா, ராஜாஜி, எஸ். ஜி. ஸ்ரீநிவாஸாசாரியார், பிச்சமூர்த்தி, 'கல்கி', கு. ப. ராஜகோபாலன், பி. எஸ். ராமையா, கி. வா. ஜகந்நாதன், 'புதுமைப்பித்தன்', த. நா. குமாரஸ்வாமி, சிதம்பர சுப்பிரமணியன், இவர்களின் ஒவ்வொரு உயர்ந்த கதையைப் பொறுக்கி எடுத்து, சுவை சற்றும் குன்றாது மிகவும் அழகிய ஹிந்தியில் மொழிபெயர்த்திருக்கும் நம் ஆசிரியரின் திறமையைக் கண்டு நாம் பொறுமை கொள்ளாமலிருக்க முடியவில்லை.

இக் கதைகள் உலகச் சிறுகதைகளுள் ஸ்தானம் பெறுவதற்குத் தகுந்தவை தானென்று இம் மொழிபெயர்ப்பைப் படிப்பவர்களுக்கு நன்கு விளங்கும்.

அ. ராம ஐயர்.

உலகத்துச் சிறுகதைகள்: புதுமைப் பித்தன் மொழிபெயர்ப்பு. (நவயுகப் பிரசாலயம் லிமிடெட் ஜி. டி. மதராஸ். விலை ரூ 1/-)

ரஷியா, நார்வே, ஜெர்மனி, ஆஸ்திரியா, ஹாலந்து, பிரான்ஸ், இதாலி, இங்கிலாந்து அமெரிக்கா, தென்கடல் தீவுகள் — இந்த நாடுகளின் சிறுகதைகளில் சில இந்தப் புத்தகத்தில் மொழிபெயர்த்து கொடுக்கப்பட்டிருக்கின்றன. மொழி பெயர்த்தவரான 'புதுமைப் பித்த'னே தமிழ் நாட்டின் தலைசிறந்த சிறுகதை எழுத்தாளர்களில் ஒருவர். அவர் மொழிபெயர்த்திருக்கும் கதைகள் பல அந்தந்த பாஷைகளில் சிறந்தவையாகக் கருதப்படுபவை. எனவே புத்தகம் மிகவும் சுவாரஸ்யமாக இருக்கிறது என்பதில் ஆச்சரியமில்லை. பொதுமக்கள் இதை நிச்சயம் ரொம்ப ரஸித்து வாசிப்பார்கள்.

முக்கியமாக, ஆண்ட்ரீவின் பொய், ஷெக்காவின் நாடகக்காரி, பலாடாவின் இஷ்டசித்தி, ஸ்டீவென்ஸனின் மாக்கெய்ம்,' ஹார்ட்டின் மிலிஸ் இந்தக் கதைகளை புதுமைப் பித்தன் மிகவும் உணர்ச்சியுடன் மொழிபெயர்த்திருக்கிறார்.

பதிப்பு மிகவும் அழகாக இருக்கிறது.

ஜடாவல்லபர்: வாகவி — திரு. அ.

சுப்பிரமணிய பாரதி இயற்றியது (ஸ்ரீ கிருஷ்ண அண்டு கம்பெனி, புது டபீர் தெரு, கும்பகோணம். விலை ரூ 1—2—0)

தமிழில் மிகவும் அழகாக எழுதப்பட்டிருந்தும் பிரபலமாகாமல் சில புத்தகங்கள் இருக்கின்றன. அவற்றுள் ஐடாவல்லபா ஒன்று. கமலாம்பாள் சரித்திரம், பத்மாவதி சரித்திரம், பிரதாப முதலியார் சரித்திரம், — இவற்றுடன் ஒப்பிட்டுக் கூறக் கூடிய நல்ல அம்சங்கள் கொண்டது இந்த நவீனம். வரகவி இதை எளிய நடையில் வெகு அழகாக எழுதி இருக்கிறார். இதற்குச் சரியான மதிப்பும் ஆதரவும் இனிமேலாவது தமிழ் நாட்டில் ஏற்படவேண்டியது மிகவும் அவசியம்.

இந்தப் புத்தகம் பள்ளிக்கூடங்களுக்கு ஏற்றவாறு புதிதாக சுருக்கிப் பதிப்பிக்கப்பட்டிருக்கிறது.

பண்டைச் சோழ மன்னர்கள்: (முதற் பாகம்) ல. ஸ்ரீநிவாச ஐயர் எழுதியது. (லலிதா பிரதர்ஸ் லிமிடெட் கும்பகோணம். விலை ரூ 1/-)

மூவேந்தர்களில் ஒருவரான சோழர்களில் சரித்திர காலத்திற்கு முன்பு தமிழ் நாட்டில் அரசுபுரிந்தவர்களின் வரலாற்றை ஆசிரியர் இப்புத்தகத்தில் எழுதியிருக்கிறார். புராணகால மன்னர்கள், சங்ககால மன்னர்கள் என்று இரண்டு பகுதிகளில் பத்து பேர்களைப்பற்றி தமிழ் இலக்கிய நூல்களில் கிடைக்கும் தகவல்களைத் தொகுத்து எழுதியிருக்கிறார்.

ஆசிரியரின் நடை மிகவும் கரடு முரடாக இருக்கிறது. "ஓரமயம் இப்பிசிராந்தையாரைக்கண்ட ஒருவர் 'ஐய! நுங்களை யான் என் இளமைப் பருவத்தின் முன்னரேயே கேள்வியின் பாலாய் அறிந்துள்ளேன். ஆதலின் நுங்கட்கு யாண்டுகள் பல சென்றிருக்க வேண்டுமே? ... இன்னும் நும்மை அணுகிற்றிலவே?" என்ற முறையில் தான் நடை புத்தகம் பூராவும் அமைந்திருக்கிறது. ஆனால் புத்தகம் மிகவும் உபயோகமானது என்பதில் சந்தேகமில்லை.

மந்தாகினி அல்லது கிராமத்தொண்டு: ஸ்ரீமான் எம். வி. ஸ்ரீனிவாசன் M.A., B.L., எழுதியது (வத்ஸா கம்பெனி, திருவல்லிக்கேணி, சென்னை. விலை 8 அணா)

இது ஒரு உயரிய சமூக சீர்திருத்த நாவல். முகவுரையில் "நம் நாட்டிலுள்ள கிராமங்களைச் சீர்திருத்த வேண்டுமென்று எங்கும் யாவரும் ஒரு முகமாகக்கூறுவதை தினசரி காண்கிறோம். கிராமப் புனருத்தாரணத்தில் மேற் கொள்ள வேண்டிய பல முறைகளை மகனூர் கிராமத்தின் வாயிலாக நன்கு விளக்கிக் கிராம மக்களைக் கைதூக்கிவிட இந்நூல் மிகவும் உதவி புரிந்துளது என்பதில் சிறிதும் ஐயமில்லை" என்று ஸ்ரீமதி வை. மு. கோதை நாயகி அம்மாள் கூறுகிறார்.

காவேரிக் கரையிலுள்ள கிராமத்தில் சூரிய பிரகாஷ் என்றும், வாஸுதேவ் என்றும், மந்தாகினி, தாரா யென்றும் பெயர் கொண்டவர்கள் இருப்பதுதான் கொஞ்சம் பொருத்தமில்லாமல் இருக்கிறது. "காதலர்கள்" பேசுவதும் நடந்து கொள்வதும் சில இடங்களில் கொஞ்சம் விரஸமாக இருக்கிறது.

ஆசிரியர் எழுதப்போகும்புத்தகங்களில் இக்குறைகள் நீங்கிவிடும் என்று நம்புகிறோம்.

ராஜ கோட்டை சத்தியாக்கிரஹம்: (இயற்றியவர், ஏ. கே. சந்திர சேகரன் பிரசுரித்தவர், ஸ்பார்ட்டன் அண்டு கம்பெனி, 156, பிராட்வே, சென்னை. விலை அணா 0—12—0)

சமஸ்தானங்கள் பிரச்னை வலுத்து விட்ட இந்த சமயத்தில் ஸ்ரீ சந்திர சேகரன் எழுதியிருக்கும் இந்தப் புத்தகம் பொது மக்களுக்கு மிகவும் உபயோகமாக இருக்கும்.

ராஜ்கோட் போரைப்பற்றிய புத்தகமானபோதிலும் பொதுவாக சமஸ்தானங்களைப்பற்றி பல முக்கியமான தகவல்கள் இதில் அடங்கியிருக்கின்றன. சமஷ்டியில் 'அங்கம்' வகிக்கப்போகும் சமஸ்தானங்களுடைய விஸ்தீரணம், ஜனத்தொகை, வருஷ வருமானம், கப்பம்— இவை அடங்கிய ஜாப்தா ஒன்று கடைசியில் கொடுக்கப்பட்டிருக்கிறது.

சமஸ்தானங்களையும் காங்கிரஸ் அரசாங்கங்களையும் குறிக்கும் இந்தியா படமொன்று இருக்கிறது. புத்தகம் மிகவும் தெளிவாக எல்லோரும் அறியுமாறு எழுதப்பட்டிருக்கிறது.

சினிமா மகாநாடு

"சிரேஷ்டன்"

அடுத்த வாரம் பம்பாயில் சினிமா மகாநாடு கூடப் போகிறது. இந்த சந்தர்ப்பத்தில் சில முக்கிய விஷயங்களைப் பிரதிநிதிகள் கவனத்துக்குக் கொண்டுவர விரும்புகிறேன். தமிழ்நாட்டு சினிமா வளர்ச்சிக்கு மிகவும் அடிப்படையாக சிற்சில சீர்திருத்தங்களை தற்போது சிந்திக்க வேண்டியது அவசியம்.

சினிமாத் துறையில் உள்ள குறைகளை பலர் எடுத்துச் சொல்லிவிட்டார்கள். ஆரம்பத்தில், கதைபமைப்பிலிருந்து கடைசியில், டிஸ்டிரிப்யூஷன் வரையில் எல்லா அம்சங்களிலும் பல குறைகளைக் காண்கிறோம். இவைகளை ஒழிக்க உடனே வழி தேடவேண்டும். பம்பாயில் கூடியிருக்கும் பிரதிநிதிகள் இவற்றை ஆராய்ந்து வழி தேடவேண்டும்.

வழக்கம்போல் 'ராபிலிம்' பற்றியும், விளம்பர வரியைப் பற்றியும், வேடிக்கை வரியைப் பற்றியும் கண்டித்து தீர்மானம் செய்துவிட்டுப் பேசாமல் இருக்கக்கூடாது. அது மாதிரியே அயல்நாட்டுப் படங்கள் இந்தியரைத் தூஷணை செய்வதைக் கண்டித்து தீர்மானங்களைச் செய்தால் மட்டும் போதாது.

பொதுவாக இந்திய சினிமாத் தொழில் வளர்ச்சிக்கும், குறிப்பாக தமிழ் சினிமாத் தொழில் வளர்ச்சிக்கும் சிற்சில நிர்மாண யோசனைகளை ஆராய்தல் அவசியம்.

முதலாவதாக, சினிமாத் தொழிலுக்கு மிகவும் இன்றியமையாததான இயந்திரங்கள் வெளிநாடுகளிலிருந்து இறக்குமதியாவதை நாம் அறிவோம். பிரதிதினமும் வளர்ந்துவரும் இந்திய சினிமாத் தொழிலுக்கு வரவர இயந்திரங்கள் அதிகமாக வேண்டியிருக்குமென்பதில் சந்தேகமில்லை. கோடிக் கணக்கான ரூபாய் பெறுமானமுள்ள இயந்திரம் ஜெர்மனியிலிருந்தும், அமெரிக்கா, இங்கிலாந்திலிருந்தும் இறக்குமதி ஆகின்றன. சினிமாத் தொழிலுக்கு அவசியமான இயந்திரங்கள் இந்தியாவில் தயாரானால் அப்பணம் இந்த தேசத்திலேயே தங்குமல்லவா? அதனால் வேலையில்லாத் திண்டாட்டமும் கொஞ்சம் ஒழியுமல்லவா? இந்த இயந்திரத் தொழிலை இந்தியாவில் ஸ்தாபிக்க வேண்டியது மிகவும் அவசியம், என்ற கிளர்ச்சி ஏற்கெனவே நடந்து வருகிறது. இந்தியாவின் தேவையைக் கவனிக்கும்போது அத்தொழில் ஒரு நாளும் நஷ்டமடையாது என்று கூறலாம். அயல்நாட்டிலிருந்து இத்தொழிலில் தேர்ந்த நிபுணர்களைக் கொண்டுவந்து மூலப்பொருள்கள் லகுவாய் அகப்படக்கூடிய கல்கத்தாவுக்கு அருகில் தொழிற்சாலையை ஸ்தாபிக்கலாம். இந்தியாவில் கிடைக்காத மூலப் பொருள்களை அயல்நாட்டிலிருந்து தருவித்துக் கொள்ளலாம். இவ்விஷயங்களைப் பரிசீலனை செய்ய சினிமா மகாநாடு ஓர் கமிட்டியை நியமிக்கவேண்டும்.

இரண்டாவதாக, இந்தியாவிலுள்ள சினிமாக் கம்பெனிகள் ஒன்று சேர்ந்து ஒன்றுக்கொன்று உதவி செய்யக்கூடிய முறையில் ஓர் மத்திய ஸ்தாபனத்தை அமைக்கவேண்டும். அந்த மத்திய ஸ்தாபனத்தின் கிளைகள் எல்லா மாகாணங்களிலும் இருக்கவேண்டும். அந்த மத்திய ஸ்தாபனம் சினிமாக் கம்பெனிகளின் பண உதவியால் நடைபெறவேண்டும் என்று சொல்ல வேண்டியதில்லை. அத்தகைய ஓர் ஸ்தாபனம் சினிமாக் கம்பெனிகளுக்கு நிபுணத்வமான யோசனை கூறவும், சௌகர்யங்கள் கொடுக்கவும் கூடும்.

மேற்படி ஸ்தாபனம், சினிமாக் கம்பெனிகள் சுலபமாக படங்களை வினியோகிப்பதற்கு உதவி செய்யும். தனிப்பட்ட கம்பெனிகள் தங்கள் செலவில் சமீபத்திலுள்ள பிரதேசங்களில் வினியோகம் செய்யலாம். ஆனால் வெகு தூரத்திலுள்ள நாடுகளில் தங்கள் படத்தை வினி

போகம் செய்ய இந்த ஸ்தாபனத்தின் உதவியை நாடலாம். உதாரணமாக ஓர் தமிழ்படக் கம்பெனி, மலாய் நாட்டில் தமிழ்ப் படத்தைக் காண்பிக்க முயலுகிறதென்றால் அந்த சமயத்தில் மலாய் நாட்டிலுள்ள மத்திய ஸ்தாபனத்தின் கிளை உதவி செய்யுமல்லவா?

மேலும், இத்தகைய மத்திய ஸ்தாபனம் கிராமங்களில் தியேட்டர்களைக் கட்டி அதன் மூலம் சினிமாத் தொழில் விருத்திக்கு வழிதேடும். சினிமாத் தொழிலை விருத்தியாக்க வேண்டுமானால் ஒவ்வொரு கிராமத்திலும் சினிமாக் கொட்டகை அமைக்கவேண்டும். தனிப் பட்டவர்கள் வசம் ஒப்புவிப்பதைவிட மத்திய ஸ்தாபனம், கொட்டகைகளை ஏற்படுத்தியும், இடவாரியாக குறிப்பிட்ட கம்பெனியின் படங்களைக் காண்பித்தும் கம்பெனிகளுக்கு உதவி செய்யலாம். இதனால் தனிப்பட்ட கம்பெனிகளுக்கு லாபம் உண்டாவதல்லாமல் செலவும் குறைகிறது.

கதையைப் பொறுக்குவதிலும் சரி, படம் எடுப்பதிலும் சரி இந்த ஸ்தாபனத்தார் கம்பெனிகளுக்கு ஆலோசனை சொல்லுவார்கள்.

சரியான கனவான்கள் இந்த ஸ்தாபனத்தில் நியமிக்கப்பட்டால் கதைகளும் அதனால் படங்களும் நிச்சயம் நன்றாக இருக்கும். சினிமாத் தொழிலுக்கு விமோசனம் பிறக்கும். அயல் நாட்டிலிருந்து நிபுணர்களை வரவழைத்து இந்த ஸ்தாபனத்தில் வேலை செய்யச் சொல்லவேண்டும். இந்த ஸ்தாபனத்தின் சார்பில் நடிப்புப் பள்ளிக்கூடம் ஒன்று ஆரம்பிக்கலாம். படம் பிடிப்பு, ஒலிப்பதிவு முதலிய விஷயங்களிலும் பயிற்சி அளிக்கலாம். இப்பள்ளிக்கூடத்தில் சேர்ந்த இளைஞர்கள் சினிமாக் கலையில் நன்றாக ஞானம் பெற்று வெளியேறுவார்கள்.

பிரதிநிதிகள் அப்படிப்பட்ட ஓர் மத்திய ஸ்தாபனத்தை அமைக்க முயற்சி எடுத்துக் கொள்ளவேண்டும்.

அப்படி ஆரம்பிப்பது மிகவும் கஷ்டம். அது நடப்பது அதைவிடக் கஷ்டம்; அது சாத்தியமானதல்ல என்று கூறினால் ஒவ்வொரு மகாணத்திற்காகவாவது, ஓர்

'தியாக பூமி'யில் பேபி ஸரோஜா

நிபுணர்கள் ஆலோசனை சபை (Expert body) இருக்கவேண்டும். அந்த சபை மகாணத்திலுள்ள எல்லாக் கம்பெனிகளுக்கும் படம் தயாரிக்கும் வழிகளை கற்பிக்க வேண்டும். இது ஏற்படாதவரை நமது சினிமாக் கம்பெனிகள் கண்றாவிப் படங்களைத் தான் தயாரித்துக் கொண்டிருக்கும்.

முக்கியமாக, யோக்கியமான சினிமாக் கம்பெனிகளுக்கு பண உதவி செய்ய வேண்டிய ஓர் அம்சத்தை பிரதிநிதிகள் ஆராயக்கடமைப் பட்டிருக்கிறார்கள். மேற் சொன்ன மத்தியஸ்தாபனம் கூட்டுறவு முறையில் ஓர் பாங்கை ஆரம்பிக்க வேண்டும் என்பது என் அபிப்பிராயம். அந்த பாங்கியின் வரவு செலவுக்கு ஒவ்வொரு அங்கத்தினரும் ஜவாப்தாரியாக இருக்கவேண்டும். இத்தகைய ஓர் பாங்கி சினிமாத் தொழிலுக்கு மிகவும் இன்றியமையாதது. ஆனால், அப்படிப்பட்ட மத்தியஸ்தாபனம் ஒன்று இல்லாவிட்டால், மாகாண நிபுணர்கள் சபையின் மேல்பார்வையில் அதே கூட்டுறவு முறையில் ஓர் பாங்கை ஏற்படுத்தலாம்.

கடைசியாக, சினிமாவின் மகத்தான உபயோகத்தை ஒருவரும் மறந்து விடக் கூடாது. உயர்தர கல்விப் படங்களும் செய்திப்படங்களும் தயாரிக்க வேண்டிய அவசியத்தை உணர்ந்து ஓர் அகில இந்தியத் திட்டத்தை பிரதிநிதிகள் வகுப்பார்களென்று எதிர் பார்க்கிறேன்.

போஷாக்கில்லாமல் இருக்கிறதா?

உங்கள் கூந்தல்
இயற்கையான ஆகாரமில்லாமல்
உயிரற்றுப் போயிருக்கிறதா?
அப்படியானால் அந்தக் குறையை நீக்க

‘கெஸ்ரைனை’

விலை அணா 12.

உபயோகியுங்கள்.

அது கேசத்திற்கு வனப்பையும் போஷாக்கையும்
கொடுக்கக் கூடியது.

விக்டோரியா டிபோ,
வடக்கு மாட வீதி, மைலாப்பூர், சென்னை.

ஈஸ்ட் இண்டியா பிலிம்ஸ் சிறந்த படம்!

இப்பொழுது தெலுங்கு ஜில்லாக்களில் மஹத்தான ஜனங்கள் கண்டு மகிழ்கிறார்கள்.

வரவிக்கிரயம்

நக்ஷத்திரங்கள் : புஷ்பவல்லி, பானுமதி, ஸ்ரீரஞ்சனி,
லக்ஷ்மீகாந்தா கவி, தெய்த கோபாலம் முதலியவர்கள்.

சென்னையில் மஹத்தான ஆரம்ப விழாவை எதிர்பாருங்கள்!

சாம்ரியா டாக்கி டிஸ்ட்ரிப்யூடர்ஸ்

20, வேப்பேரி ஹைரோட் :: பி. டி., மதராஸ்.